

# திங்கள்

ஜனவரி – மார்ச் 2014

அரசாங்க தகவல் திணைக்கள
வெளியீடு











## விவசாயிகளின் வாழ்வில் புது யுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைதீவு ஜனாதிபதியின் இலங்கை விஜயம்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்




முள்ளும் மலரும் 02

ஆசிரியர் தலையங்கம் 03

விவசாயிகளின் வாழ்வில் புது யுகம் 04

திவிநெகும 06

பொருளாதார அபிவிருத்தி 08

ஜனாதிபதியின் சுதந்திர தின உரை 09

பிரதான கட்டுரை 13

இளைஞர் விவகாரம் 16







19 ஜனாதிபதி நாட்குறிப்பு

22 ஆரோக்கியம்

28 சுற்றுலாத்துறை அபிவிருத்தி

34 மீள்குடியேற்றம்

36 கிழக்கின் உதயம்

40 அபிவிருத்தி செய்திகள்

42 வடக்கின் வசந்தம்

43 நீர்ப்பாசன அபிவிருத்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளும் மலரும்

## அரசாங்கத்தின் அபிவிருத்தி பணிகளை மக்கள் அறியச் செய்யும் களம் – 'திங்கள்'




30 வருட கொடிய யுத்தத்தின் பின்னர் நாடு இன்று எதிர்பாராத துரித முன்னேற்றத்தை கண்டு வருகிறது. இந்த நாட்டின் அபிவிருத்திகளை 08 வருடங்களுக்குள் யாரும் எதிர்பார்த்திருக்க முடியாதவாறு. அதிவேக பாதைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், முழு நாட்டுக்கும் 24 மணி நேர மின்சார வசதி என இன்று எமது நாடு பெரும் முன்னேற்றம் அடைந்து வருகின்றது. இவை அனைத்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது.

இந்த நிலையில் மஹிந்த சிந்தனை முற்போக்கு திட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அனைத்து துறைசார்ந்த அபிவிருத்தி திட்டங்களை ஒன்றிணைத்து அவற்றினை மக்கள் பார்வைக்கு விடும் ஓர் பாரிய பணியை திங்கள் சஞ்சிகை செய்து வருகிறது.

66 ஆவது சுதந்திர தின விசேட சஞ்சிகையாக இச்சஞ்சிகை வெளிவந்து இருப்பது விசேடமாக குறிப்பிடப்படல் வேண்டும். அத்துடன் ஜனாதிபதியின் நாட்குறிப்பு எனும் தலைப்பில் பிரசுரமாகி இருக்கும் தொகுப்பு பல தகவல்களை சுமந்து இருப்பது குறிப்பிடத்தக்கது. அரசியல் மாத்திரமல்லாமல் ஆரோக்கியம் சம்பந்தமான பல தொகுப்புகளும் சஞ்சிகையினுள் அடங்குவது பல் சுவை வாசகர்களுக்கு இனிதே.

இவ்வாறு பல்வேறு விசேட அம்சங்களுடன் வெளிவந்துள்ள இச் சஞ்சிகையின் சமூகப்பணி தொடர வாழ்த்துகின்றேன். ■

**எஸ்.கலீல்**
**மூதூர்**

மக்களை விழிப்பூட்டும் பாரிய பங்களிப்பினை திங்கள் சஞ்சிகை செய்து வருகிறது. அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை தொகுத்து தமிழ் மொழியில் வெளியிடப்படும் ஒரு சஞ்சிகையாக திங்கள், அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பில் தமிழ் பேசும் மக்களை விழிப்பூட்டும் ஓர் மகத்தான பணியை செய்து வருகிறது.

சர்வதேச ரீதியில் நாடு இன்று இக்கட்டான சூழலை எதிர் நோக்கி இருக்கும் இவ்வேளையில், அரசின் அபிவிருத்தி திட்டங்கள் வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்களையும் சென்றடைகின்றது என்பதைக் காட்டும் ஓர் சிறந்த ஆதாரமாக திங்கள் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

அதே வேளை மக்களின் மனதுக்கு இதமூட்டும் வர்ண பிரயோகங்களுடன் தரமான முறையில் இச் சஞ்சிகை வெளியாகின்றது.

இது மென்மேலும் வளர்ந்து சிகரம் தொட மனமாற வாழ்த்துகின்றேன். ■

**ஆர். கிருபாகரன்**
**கலஹா**

# வாசகர் கருத்து



திங்கள் தொடர்பான உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதலாம். உங்கள் கருத்துக்களுக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம். நீங்கள் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி :

**முள்ளும் மலரும்**
திங்கள் ஆசிரியர் பீடம்,
அரசாங்க தகவல் திணைக்களம்,
163, கிருலப்பனை வீதி,
கொழும்பு – 05.
email : thingal@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பயன்பாட்டின் போது எச்சரிக்கையுடன் செயற்படுவோம்

இன்று எமது நாட்டில் தொற்று நோயல்லாத ஆட்கொல்லி நோய்கள் அதிகரித்து வருவதோடு அவை தொடர்பாக கூடுதலாக மக்கள் எச்சரிக்கையுடன் செயற்பட்டு வருவதையும் அவதானிக்கின்றோம். அத்துடன், உணவுப் பயன்பாடுகள் தொடர்பாகவும் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றன. தற்காலத்தில் உணவு உற்பத்தி, நீண்ட காலத்துக்கு பாதுகாத்தல், பதப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், முதலான செயல்முறைகளில் மட்டுமல்லாது உணவு சமைப்பதிலும் இரசாயனப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்திருப்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

வசதிக்காகவும், மானிய விலையில் கிடைப்பது என்பதற்காகவும் குறைந்த காலத்தில் கூடிய அறுவடை கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் இரசாயன மருந்துவகைகளைக் கூடுதலாகப் பயன்படுத்தும் செயற்பாடுகள் தொடர்பாக சிந்திக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது.

மேலும், ஆறு, குளம், கால்வாய், குட்டைகள் உள்ளிட்ட நீர் நிலைகள் மட்டுமல்லாது முழு சூழலுமே இவ்விரசாயன கலவையால் மாசடைகின்றன. எமது நாட்டின் வட மேல் மாகாணப் பிரதேசங்களில் கூடுதலானோர் சிறு நீரகக் கோளாறுகளுக்கு ஆளாகி இருப்பதும் இந்த நாசகார செயற்பாடுகளின் வெளிப்பாடாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தவிர பழங்களையும், காய்கறிகளையும் கூடிய காலம் பாதுகாத்து வைப்பதற்கும் கிழங்கு வகைகளை அழுகாது களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும் பயன்படுத்தப்படும் சில இரசாயனப் பதார்த்தங்கள் தடை செய்யப்பட்டவை எனவும் தெரிய வருகின்றது. அண்மையில் மேற் கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின் போது "எதபோன்" (Ethephon) எனப்படும் நச்சுத் தன்மையுடைய இரசாயனப் பொருள் சேர்க்கப்பட்ட 75,000 கி.கிராம் நிறையுடைய பழத்தொகை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினரால் கண்டு பிடிக்கப்பட்டமை, இந்நிலைமை தொடர்பாக மேலும் விளங்கிக் கொள்வதற்கான சிறந்த உதாரணமாகும்.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையினரால் மேற் கொள்ளப்பட்டு வரும் சுற்றிவளைப்புகள் மூலம், உடலுக்கு கேடுவிளைவிக்கும் உணவுப் பொருட்கள் தொடர்பாக எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்ற சிந்தனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் இவ்வாறான சுற்றிவளைப்புகள் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமா? பொருளாதார இலாப நோக்கை மாத்திரம் கவனத்திற் கொண்டு இதே குற்றத்தைத் தொடர்ந்து செய்வதற்கு அனுமதிக்கத்தான் முடியுமா?

எனவே இவ்விடயங்கள் தொடர்பாக மக்கள் அடிக்கடி அறிவூட்டப்படுவது அவசியமான ஒன்றாகும். ஊடகங்களின் பங்களிப்புடன், தேசிய அடிப்படையில் இவ்விடயம் தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட வேண்டும். கடும் சட்ட திட்டங்களுடன், இவ்விடயம் தொடர்பாக அரசு தலையிடுவதுடன், நச்சுப் பொருள் சேர்க்கப்படாத உணவை உட்கொள்வதன் அவசியம் தொடர்பாக மக்களை அறிவூட்டும் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும். ■

ஆ-ர்


**திங்கள்** மாதாந்த சஞ்சிகை

**ஆலோசகர்கள்**

பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல

அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்

வசந்தப்ரிய ராமநாயக்க

தகவல் பணிப்பாளர்

**பிரதம ஆசிரியர்**

ஏ.ஹில்மி முஹம்மத்

**இணை ஆசிரியர்**

நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்

**உதவி ஆசிரியர்கள்**

எஸ்.ஏ.எம். பவாஸ்

ஆர்.எம். நாதன்

எஸ். சரீப்தீன் முஹம்மத்

**இணைப்பு நடவடிக்கை**

எம்.எஸ்.எம். மிஸ்வர்

**கணனி பக்கவடிவமைப்பு**

எம்.முஜாஹித் நிஸாருத்தீன்

**புகைப்படக் கலைஞர்கள்**

சுதத் சில்வா

சரத் தர்மசிரி

பீ.டீ. ரஞ்சித்

எல். ரோஹன

யமுனி பிரபாத்

**முகவரி**

திங்கள் ஆசிரியர் பீடம்

அரசாங்க தகவல் திணைக்களம்

163, கிருலப்பனை வீதி, கொழும்பு 05.

தொலைபேசி: 0112512423, 0112513756

மின்னஞ்சல்: thingal@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவசாயிகளின் வாழ்வில் புதுயுகம்



இன்று வியாபாரமும், விவசாயமும் ஒன்றுடன் ஒன்று கலந்தாயிற்று. மதி நுட்பத்துடன் வியாபாரம் செய்வது போன்றே விவசாயத்தையும் செய்தாக வேண்டும். இலங்கை விவசாய நாடாக இருந்த போதும் அரச அனுசரணை இன்றி ஒருபோதும் விளைநிலத்தை காப்பாற்றிக் கொள்ள முடியாது. விவசாயிகள் தம் விளைநிலங்களை பாதுகாத்து, இலாபமீட்டும் தொழிலாக விவசாயத்தை முன்னெடுத்து செல்ல அரச அனுசரணை கட்டாயமாகும்.

இந்த உண்மையை சரியாக உணர்ந்து கொண்ட அரச தலைவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களாவார். 2005 ஆம் ஆண்டுக்கு முன்னர் கடன்களை கட்டிக் கொள்ள முடியாமல், அறுவடைகளை விற்றுக் கொள்ள முடியாமல், தனது பிள்ளைக் குட்டிகளை கவனித்துக் கொள்ள முடியாமல் தனது உயிரையே மாய்த்துக் கொண்ட விவசாயிகளின் கதைகளை அடிக்கடி கேட்கக் கூடியதாக இருந்தது. தனது சொந்த நெற் களஞ்சியசாலைகளை விற்று உரம் வாங்கிய யுகம் 2005 ஆம் ஆண்டுக்கு பிறகே முடிவுக்கு வரலாயிற்று.

**உர மானியம்**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஒரு மூட்டை உரத்தை 350 ரூபாவுக்கு வழங்க எடுத்த தீர்மானத்திலிருந்து அம்மாற்றம் ஏற்படலாயிற்று. கடந்த 8 ஆண்டுகளும் விவசாயிகளின் பொற்காலமாக பொறிக்கப்படுகிறது.

அன்று உர மானியம் வழங்கக் கோரி விவசாயி ஒருவர் மெதிரிகிரிய பகுதியில் பிரதமரின் காலில் விழுந்த சோக சந்தர்ப்பம் அநேகரின் உள்ளங்களை உருக்கி இருக்கலாம். அந்தக் கதறல் ஒரு போதும் 350 ரூபா உர மூட்டையை எதிர்பார்த்து இருக்கவில்லை. 350 ரூபாவுக்கு மேலான ஒரு சாதாரண விலையையே எதிர்ப்பார்த்து இருந்தது. எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் எவரும் எதிர்ப்பாராத வண்ணம் ஒரு மூட்டை உரத்தினை 350 ரூபாவுக்கு கொடுத்தது போற்றிப் புகழக் கூடியதே. இதுவரை உர மானியத்திற்காக வேண்டி அரசாங்கம் வருட மொன்றுக்கு 3500 - 4000 கோடி ரூபாய்களை செலவிடுகிறது. நெற் செய்கை மாத்திரமல்லாமல் மரக்கறி மற்றும் ஏனைய பயிர் செய்கைகளுக்கும் இம் மானிய உரம் வழங்கப்படுகிறது.

இவ்வாறு 350 ரூபாவுக்கு வழங்கப்படும் உர மூட்டையானது சந்தையில் 3500 பெறுமதியான 50 கிலோ கிராம் உரம் அடங்கிய உர மூட்டையே. இவ் உரத்தை கொள்வனவு செய்வதற்காகவேண்டி விவ்சாயி ஒருவர் 100 ரூபா செலுத்தும் போது அரசாங்கம் அத் தொகையில் 90 ரூபாவை தாங்கிக் கொள்கிறது. ஒரு போகத்தின் போது சுமார் 10 இலட்சம் விவசாயிகள் உர மானியத்திற்கு உரித்தாகின்றனர். அதே போன்று உர மானியத்தின் விளைவாக 1,737,407 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யப்படுகிறது. 312,746 மெற்றிக் தொன் உரம் ஒரு போகத்தின் போது விநியோகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**நெற் பயிர் செய்கைக்கு விலை நிர்ணயித்தல்**

ஒரு கிலோ கிராம் நெற் செய்கைக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டி விவசாயிகளை திருப்திப்படுத்தும் வகையிலும் நுகர்வோர் களை சந்தோசப்படுத்தும் வகையிலும் விலை நிர்ணயிக்கப் பட்டமை மற்றுமொரு வெற்றியாகும். இன்று 30–35 ரூபா என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே போன்று அரிசியின் விலையும் 03 வருடங்களாக எவ்வித மாற்றங்களுக்கும் உட்படாமல் நிலையாக இருந்து வருகின்றது. உரமானியம் மற்றும் விலை நிர்ணயிப்பு காரணமாக இன்று விவசாயம் இலாப மீட்டும் தொழிலாக மாறி விட்டது. இது விவசாயிகள் விரும்பி விவசாயத்தில் ஈடுபடவும் காரணமாயிற்று.

கடந்த வருடத்தில் மாத்திரம் இந்நாட்டில் நெல், தேயிலை, தேங்காய், இறப்பர், சோளம் மற்றும் உழுந்து ஆகியவற்றின் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் 23,000 கோடி ரூபாவாகும். இக்காலப்பிரிவில் மாத்திரம் நெற் பயிர் செய்கை யாளர்களின் வருமானம் அன்று விட இன்று 6,100 கோடியினால் அதிகரித்துள்ளது. 2005 ஆம் ஆண்டு 3,246,190 மெட்ரிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டது. 2012 ஆம் ஆண்டளவில் அது 3,845,945 மெ.தொ. ஆக உயர அரசாங்கம் வழங்கிய உரமானியமும் ஏனைய சலுகைகளுமே காரணமாகும்.

**விவசாயிகளின் ஓய்வூதிய திட்டம்**

விவசாயிகளின் ஓய்வூதிய திட்டம் இவை அனைத்தையும் விட ஒரு படி மேலாகும். அண்மையில் வடக்கு, கிழக்கு உட்பட நாடெங்கிலுமுள்ள 1,28,659 விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் செயற்திட்டம் ஜனாதிபதி யினால் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. விவசாயிகளுக்கான ஓய்வூதியத்திட்டம் 1987 ல் முதன் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் முறையான திட்டமின்றி அதனை நடைமுறைப் படுத்த முடியாமற் போனது. 750 மில்லியன் ரூபா இத்திட்டத்திற்காக அப்போது தேவைபட்ட போதும் 75 மில்லியன் ரூபாவே திறைசேரி மூலம் வழங்கப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் 2005 ல் மீண்டும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தினார். பல்வேறு வகையிலும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதோடு இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் விவசாய ஓய்வூதிய திட்டத்துக்காக 1000 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி ஒதுக்கினார். தற்போது விவசாய காப்புறுதி பெறுவதற்கு தகுதி பெற்றுள்ள 1,28,659 விவசாயிகளுக்கு இதன் மூலம் விவசாய ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

புதிய ஓய்வூதியக் கொடுப்பனவு திட்டத்தின் கீழ் 78 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு 5000 ரூபாவும், 71 – 77 வயதினருக்கு 2000 ரூபாவும், 64 – 70 வயதினருக்கு 1000 ரூபாவும் விவசாய ஓய்வூதியமாக வழங்கப் படுகின்றன. தொடர்ச்சியாக இத்திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு கடந்த 08 வருடங்களும் விவசாயிகளின் பொற்காலமாக கழிந்து வருகிறது. விவசாயிகளின் எதிர்ப்பார்க்காத பல முன்னேற் பாடுகள் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றமை விசேட அம்சமாகும். ■

# தேசத்திற்கு மகுடம்

தேசத்திற்கு மகுடம் கண்காட்சி 2014 பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் ஆரம்பிக்கப்பட்டது. இக்கண் காட்சி ானது மார்ச் மாதம் முதலாம் திகதி நள்ளிரவு 12 மணி வரை நடைபெற்றது.

கண்காட்சியை பார்வையிடுவதற்கான டிக்கட்டுகள் அபிவிருத்தி லொத்தர் சபையினால் வெளியிடப் பட்டன. சீட்டிழுப்பு முறையில் அந்த டிக்கட்டுகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இலவசமாக கண்காட்சியை இம்முறை பார்வை யிட்டனர்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் வடமேல் மாகாண பல்கலைக்கழகம் – தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் குளியாப்பிட்டிய மத்திய மகா வித்தியாலயம் ஆகியவை உள்ளடங்கலாக 1, 60,000 சதுரஅடி பரப்பில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும் தேசிய காப்புறுதியினூடாக 500 மில்லியன் ரூபா காப்புறுதியும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

தேசத்திற்கு மகுடம் திட்டத்தின் கீழ் கேகாலை, புத்தளம் மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களின் அபிவிருத்திக்காக சுமார் 20,000 மில்லியனுக்கும் அதிகமாக செலவிடப்பட்டுள்ளது. சிறந்த நாடு பாதுகாப்பான இருப்பிடம் என்ற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2407.05 நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. அதனூடாக குறைந்த வருமானமுடைய குடும்பங் களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான கட்டுமானப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.


மேலும் நடமாடும் சேவைகளினூடாக கிராமப் புற மக்களது பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப் பட்டுள்ளன. தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்கு மொத்தமாக 50,000 மில்லியன் ரூபா செலவிடப் பட்டுள்ளது. கண்காட்சி நடத்தப்படும் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள நிரந்தர கட்டிடங்களுக்காக 850 மில்லியன் ரூபாவும் உள்போக்குவரத்து, தண்ணீர், மின்சாரம் மற்றும் மலசல கூட வசதிகளுக்காக 500 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவிநெகும திட்டத்தின் புதிய பரிணாமம்









2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 03ம் திகதி திவிநெகும அபிவிருத்தி திட்டத்தின் குறிப்பேட்டில் பதியப்பட வேண்டிய நாளாக கருதப்படுகின்றது. வறுமைக் கோட்டில் வாழும் 18 இலட்சம் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் அமைக்கப்பட்ட இத்திவிநெகும திட்டத்தின் மூலம் 50 இலட்சம் மக்களுக்கு சிறந்த அனுகூலங்களை பெறக்கூடிய வாய்ப்பு 2014 ஜனவரி மாதம் 03ம் திகதி உதயமானது.

இலங்கையர் ஒவ்வொருக்கும் வறுமையின்றி பசி போக்கி ஆரோக்கிய வாழ்வுடன் வளம் பெறும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதே திவிநெகும திணைக்களமாகும். சமுதாய மேம்பாட்டிற்கு வாழ்வாதார அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது இதன் முதற் கடமையாகும்.

திவிநெகும மசோதா 117 அதிகப்படியான வாக்குகளால் 2013 ஜனவரி 8 ம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இம்மசோதாவிற்கான அங்கீகாரத்தை உயர் நீதிமன்றமும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்திவிநெகும திணைக்களத்திற்கு சமூர்த்தி அதிகார சபையிலிருந்து 27,000 ஊழியர்களும், வேறு 05 அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களில் பணி புரிந்தவர்களும் அரச வேதனங்களும் சகாய நலன்களுக்கும் பயன் பெறக்கூடிய வகையில் உரித்தாகின்றார்கள்.

திவிநெகும என்ற ஒரே அமைப்பின் கீழ் சமூர்த்தி மற்றும் 05 தொண்டு நிறுவனங்கள் இயங்கும்.

- மலையக அபிவிருத்தி அதிகார சபை
- தென்னிலங்கை அபிவிருத்தி அதிகார சபை
- இலங்கை சமூர்த்தி அதிகார சபை
- சமூர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம்
- மலை நாட்டு கமத் தொழில் மறு சீரமைப்பு திணைக்களம்

ஆகிய 05 நிறுவனங்களினதும் பௌதீக மற்றும் மனித வளம் உள்ளிட்ட அனைத்தையும் ஒன்று சேர்த்து 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் கீழ் இப்புதிய திணைக்களம் தாபிக்கப்பட்டது.

ஜனவரி 03 ம் திகதி இவ்வறிவித்தல்கள் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு வரலாற்றுப் பெருமை வாய்ந்த திட்டத்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஏழை எளிய மக்களின் உயர்வை மனதில் வைத்தே உருவாக்கினார். இலவச கல்வி, விவசாய காணித்திட்டம், தொழிலாளர் சகாய நிதி, காணி சீர்த்திருத்த மசோதா போன்றவைக்கு ஒப்பானதே இந்த திவிநெகும திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்ல நோக்குடன் அமைச்சர் பசில் ராஜபக்ஷவால் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு ஒவ்வொருவரும் கைகொடுத்து வாழ்வாதாரத் தையும் நாட்டின் அபிவிருத்தியையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

தற்போது 12,533 குடிசை கைத்தொழில்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதோடு 30,000 பேர் தொழில் பயிற்சியும் பெற்று வருகின்றனர்.

இவர்களுக்கு தேவையான முதலீடு களுக்கான நிதியுதவி அரச வங்கிகள் மூலம் வழங்கப்படுகிறது. ஆயிரக்கணக்கான விவசாயி களும், கால்நடை வளர்ப்போரும் மற்றும் கோழிப் பண்ணையாளர்களும் இத்திட்டத்தில் பிரவேசித்து தேசிய பொருளாதாரத்திற்கு கைகொடுத்து வருகின்றனர். கூடிய விரைவில் பால், மீன், சுய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும் இருக்கும். ■

---

# வீட்டுக் கைத்தொழிலை ஊக்குவிக்கும் திவிநெகும

திவிநெகும தேசிய திட்டத்தின் கீழ் 12,535 மனைக் கைத்தொழில்கள் நாடு முழுவதும் ஆரம்பிக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இனங்காணப்பட்ட 77,627 பயனாளிகளுள் பயிற்சியைப் பூர்த்தி செய்த 18,601 பேருள் 12,535 பேருக்காக மனைக் கைத்தொழிலை மெம்படுத்த தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 11 திகதி ஆரம்பமான திவிநெகும திட்டத்தின் ஐந்தாவது கட்டத்தின் மூலம் 4,901 பயனாளிகள் நன்மை அடைந்தனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வழி நடத்தலில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தினை பாரம்பரிய கைத்தொழில், சிறு, தொழில் முயற்சி அபிவிருத்தி, கைத்தொழில் வாணிபம், தொழில்நுட்ப ஆராய்ச்சி, இளைஞர் விவகார, திறன்கள் ஆகிய அமைச்சுக்களால் மேற் கொள்ளப்படுகின்றன.

திவிநெகும திட்டத்தின் கீழ் ஆடை உற்பத்தி, கித்துல், பனை தொடர்பான உற்பத்தி துறைகளிலேயே அதிக கைத்தொழில்கள் ஆரம்பமாகியுள்ளன.

மேலும், ஏனைய வீட்டுத் கைத்தொழில் களும் இத்திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை தேயிலை உற்பத்தியில் சாதனை

நாட்டில் 2013 ஆம் ஆண்டில் 339 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டுக்கு 1.6 மில்லியன் இலாபம் கிடைத்துள்ளது. இது தேயிலை உற்பத்தி வரலாற்றில் பாரிய சாதனையாகும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டில் 328 மில்லியன் கிலோ தேயிலையே உற்பத்தி செய்ய முடிந்தது. தேயிலை செய்கைக்கு வழங்கப்படுகின்ற உர மானியம் காரணமாகவே தேயிலை உற்பத்தி அதிகரித்துச் செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார். 2013 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 339 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தியில் 70 வீதமான தேயிலை சிறு தேயிலை உரிமையாளர்களினாலேயே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் சிறு தேயிலை தோட்டங்களுக்கு பல்வேறு வசதிகள் பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளமையினாலேயே இவ்வதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் உயர்வான கேள்வி ஏற்பட்டுள்ள தேயிலை செய்கைக்கு நிவாரணமாக ஒரு ஹெக்டேயருக்கு 350,000 ரூபா வழங்கப் பட்டுள்ளது. 3,500 ரூபா பெறுமதியான 50 கிலோ கொண்ட உரம் 1,500 ரூபாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் பல தீர்வுகளை வழங்கி வருகின்றது. ஒரு காலத்தில் ஒரு கிலோ தேயிலை கொழுந்தின் விலை 25 ரூபாவாக குறைவடைந்தது. ஆனால் தற்போது 90 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. எனினும் தேயிலை செய்கைக்கு வழங்குகின்ற நிவாரணங்களை அரசாங்கம் குறைக்கவில்லை.

எமது நாடு சிறிய நாடாகும். எனவே நிலத்தை விரிவுபடுத்திக் கொள்ள முடியாது. இருக்கின்ற தேயிலை செய்கையை பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும். இலங்கையை பொறுத்தவரையில் 206,104 ஹெக்டேயர் நிலத்தில் தேயிலை உற்பத்தி செய்யப்படுகின்றது. அவற்றில் 70 வீதமானவை சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்களினால் முன்னெடுக்கப்படுகின்றன. அதாவது 397,223 சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களினால் தேயிலை உற்பத்தி செய்யப்படுகின்றது. சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் 120,664 ஹெக்டேயர் நிலப்பரப்பில் தேயிலை உற்பத்தி செய்கின்றனர். சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களினால் 15 இலட்சம் பேர் தங்கி வாழ்கின்றனர்.

இலங்கையில் தனிநபர் தேயிலை பாவனையானது 1.3 கிலோ கிராமாகும். 14 மாவட்டங்களில் சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் தேயிலை உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இரத்தினபுரி, காலி, மாத்தறை போன்ற மாவட்டங்கள் அவற்றில் முன்னணியில் உள்ளன.

2013 ஆம் ஆண்டு இம்மாபெரும் வெற்றிக்கு மஹிந்த சிந்தனை வேலைத்திட்டமே காரணம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டில் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் பாதுகாப்பது எமது பொறுப்பு

## 66வது தேசிய சுதந்திர தின விழாவில் ஜனாதிபதி

முழு இலங்கைத் தீவும் சுதந்திரத்தை அனுபவிக்கும் நிலையில், 66வது சுதந்திர தினத்திற்காக இன்று நாம் எமது தேசிய கொடியை ஏற்றுகிறோம். சுதந்திரத்துடன் தொடர்புடைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரதேசத்தில் இன்று நாம் ஒன்றுகூடியுள்ளோம்.

இப்பிரதேசம் இரண்டாயிரம் வருடங்களுக்கும் முன்னர் தேவநம்பியதிஸ்ஸ மன்னரின் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட விகாரைகளைக் கொண்ட பிரதேசமாகும். அதேபோன்று சோழ ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து நாட்டை மீட்டெடுத்த விஜயபாகு மன்னனுக்கு பாதுகாப் பளித்தது இப்பிரதேசம் என எமது வரலாறு குறிப்பிடுகிறது. மகாநாக இளவரசரின் மனைவிக்கு இந்த கேகாலையில் வைத்துத் தான் ஒரு இளவரசர் பிறந்தார். அப்பகுதிக்கு நான் அண்மையில் சென்றிருந்தேன். அது யடஹலென என்ற கிராமமாகும். மகாநாக இளவரசருக்குப் பிறந்த மகன் யடாலதிஸ்ஸ. யடாலதிஸ்ஸவின் மகன் கோட்டாபய. கோட்டாபயவின் மகன் காவந்திஸ்ஸ. காவன் திஸ்ஸவின் மகன் எமது துட்டகைமுனு மன்னராவார்.

எமது சீத்தாவக்க ராஜசிங்க மன்னரின் இராச்சியத்திற்கு உரித்தான கேகாலை மாவட்டத்தில் இந்த சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடைபெறுவது மிகவும் பொருத்தமானதாகும்.

எமது தாய் நாட்டுக்கு கௌரவமான சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள 2005ஆம் ஆண்டில் மஹிந்த சிந்தனைக்கு இந்த நாட்டு மக்கள் அங்கீகாரம் அளித்தபோது, இலங்கையர்களுக்கு தமது தாய் நாட்டின் மூன்றில் ஒரு பகுதிக்கு சென்று வரக்கூடிய சுதந்திரம் இருக்கவில்லை. இந்த நாட்டின் கரையோரப் பகுதியின் மூன்றில் இரண்டு பகுதியை புலிகள் பலவந்தமாக தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். நர்ட்டின் ஒருமைப்பாடு மட்டுமன்றி பொருளாதாரமும் பாதாளத்தில் இருந்தது.

சுதந்திரம் என்பது பொறுப்பு. பயங்கரவாதத்திலிருந்து நாட்டை விடுவிக்கவோ, பொருளாதார சுதந்திரத்தை நாட்டுக்கு பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவோ முன்பு இருந்த அரசாங்கங்கள் தயாராக இருக்கவில்லை. விமான நிறுவனங்கள், எரிவாயு நிறுவனங்கள், பெருந்தோட்ட கம்பனிகள், காப்புறுதி நிறுவனங்கள் போன்ற எல்லாவற்றையும் நாம் மீண்டும் மக்களுடைமையாக்கினோம். நெடுஞ்சாலைகள், நவீன வீதிவலையமைப்புகள், புதிய துறைமுகங்கள், புதிய விமான நிலையத்தை அமைத்து முழு நாட்டுக்கும் 24 மணி நேரமும் மின்சாரத்தை வழங்கும் ஒரே நாடாக இலங்கையை ஆக்கி சுதந்திரத்தின் பெறுமதியை நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாட்டுக்குப் பெற்றுக்கொடுத்தோம்.

கொழும்பைப் போலவே ஏனைய எல்லா நகரங்களையும் கிராமங்களையும் சூழல் நட்புடையதாக ஆக்கினோம். வரலாற்றில் முதற் தடவையாக கிராமத்து சூழலை கொழும்புக்கு கொண்டுவந்து, கொழும்பில் உள்ள அபிவிருத்தியை கிராமங்களுக்கு கொண்டுசென்றுள்ளோம். குளங்கள், நீர்த்தேக்கங்களை அமைத்து நாட்டை அரிசியில் தன்னிறைவடையச் செய்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். இலட்சக் கணக்கான பட்டதாரிகளுக்கு அரசாங்க தொழில்களைப் பெற்றுக்கொடுத்து வேலைவாய்ப்பில்லா பிரச்சினையை தீர்த்தமை எமது காலப் பகுதியில் செய்யப்பட்ட மிக முக்கியமானதோர் பணியாகும்.

முழு நாட்டினதும் பிள்ளைகளுக்கு மும்மொழிகளையும் போதிக்கவும் விஞ்ஞான பாடங்களைப் போதிக்க தொழிநுட்பத் துறையை ஆரம்பிக்க பல்கலைக்கழகங்களுக்கான நுழைவைப் பெற்றுக்கொள்ளாத இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு உயர் கல்வி மற்றும் தொழில் கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் திசைக்கு நாட்டை வழிகாட்டியுள்ளோம். இன்று இந்த நாட்டில் காணப்படும் அபிவிருத்திகளை 8 வருடங்களுக்கு முன் எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது.



முதல் முறையாக பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை நடத்தி, நாம் எப்படி நாட்டை அபிவிருத்தி செய்துள்ளோம் என்பதையும், நாட்டின் சமாதானத்தையும், மக்களிடம் காணப்படும் நல்லிணக்கத்தையும் உலகுக்கு காட்டினோம். எமது நாட்டை விமர்சிக்கும் மிகக் கடுமையான விமர்சகரும் இந்த பாரிய உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்திகளை ஏற்றுக்கொள்வார்.

நாங்கள் மிகத் துரிதமாக யுத்தத்திலிருந்து சமாதானத்திற்கு வினைத்திறனற்ற நிலையிலிருந்து வினைத்திறனை நோக்கி, அசுத்தத்திலிருந்து தூய்மைக்கு, பின்னடைவில் இருந்து அபிவிருத்திக்கு அடிமைத் தனத்திலிருந்து சுதந்திரத்திற்கு முன்னேறி, வருகிறோம்.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டிய வெற்றியை தெற்கில் உள்ள மக்கள் பெற்றுக் கொள்ளும்போது அதனை வடக்கு மக்களின் மிகப் பெரும் வெற்றியாக ஆக்கவேண்டியது எமது பொறுப்பாகுமென நாம் அன்று அறிந்திருந்தோம்

அன்று வடக்கு மக்களின் மனித உரிமைகள் புலிகளால் நசுக்கப்பட்டபோது அவற்றை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க எவரும் முன்வர வில்லை. அந்தத் தேவை எவருக்கும் இருக்கவில்லை. முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம், சேம் தம்பிமுத்து, லக்ஷ்மன் கதிர்காமர், ராஜீவ் காந்தி ஆகியோர் கொலை செய்யப்பட்டபோது கூட மனித உரிமைகள் பற்றி எவரும் வாய் திறக்கவில்லை.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் எல்ரீரீஈ.யில் இணைந்திருக்க வேண்டும். ஆயிரக் கணக்கான பாடசாலை சிறுவர்கள் பலவந்தமாக எல்ரீரீஈ.யில் சேர்க்கப்பட்டிருந்தனர். பாடசாலை விட்டு வீட்டுக்கு வரும் வழியில் பிள்ளைகளை புலிகள் பலவந்தமாக பயிற்சி முகாம்களுக்கு இழுத்துச் சென்றனர். பிள்ளைகளுக்கு என தெற்கிலிருந்து செல்லும் உதவிகளை புலிகள் பறித்துக்கொண்டனர். வடக்கில் ஒரு பெண் பிள்ளை பருவ வயதை அடைவதற்கும் புலிகள் வரி அறவிட்டனர். எந்தக் காரணம் கொண்டும் முழுக் குடும்பமும் ஒன்றாக சேர்ந்து கிளிநொச்சியை விட்டுச் செல்ல அனுமதிக்கப் படவில்லை.

· வடக்கில் அரச ஊழியர் ஒருவர் மாதச் சம்பளத்தை பெற்றதும் அதில் ஒரு பகுதியை புலிகள் பிடுங்கிக்கொண்டனர். அதற்காக கச்சேரி வாசலிலேயே நின்றனர். புலிகள் பதுங்கு குழிகளை அமைக்க வட பகுதி மக்களை பலவந்தமாக ஈடுபடுத்தினர்.

இந்த வட பகுதி மக்கள் சுதந்திரத்தைத் தேடி சிங்கள மக்களிடம் வந்தனர். கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, மோதர, மட்டக்குளி மற்றும் கொழும்புக்கு உள்ளும் வெளியிலுமாக எல்லா இடங்களும் சுதந்திரத்தைத் தேடி வந்த வட பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்களால் நிரம்பிக் காணப்பட்டது.

2009ஆம் ஆண்டில் நாங்கள் பயங்கர வாதத்தை ஒழித்துக் கட்டியிருக்காவிட்டால் வடக்கில் உள்ள பிள்ளைகளுக்கு இன்றுபோல பாடசாலைக்கு செல்ல, பல்கலைகழகங்களுக்குச் செல்ல முடிந்திருக்காது. இன்று வடக்கில் உள்ள மக்கள் அன்றைப் பார்க்கிலும் எவ்வளவு உரிமைகளை அனுபவிக்கின்றனர். வடக்கிற்கு சென்றால் அதனைக் கண்டுகொள்ளலாம்.

2009 மே 19ஆம் திகதிக்குப் பின்னர் இந்த 03 தசாப்த பிரச்சினை முடிவுக்கு வந்தது. எந்தவொரு வெடிகுண்டோ துப்பாக்கி சன்னமோ 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெடித்தது கிடையாது. எமது கிராமங்களில் வெள்ளைக் கொடிகள் கட்டப்படவும் இல்லை.

இன்று மீண்டும் வடக்கில் சுதந்திரத்தை அனுபவிக்கும் மக்களை பலியாக்குவதற்கு சில சர்வதேச சக்திகள் முயற்சித்து வருவதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். எப்போதும் ஆக்கிரமிப்பாளர்கள் முதலைக் கண்ணீரில் நீந்தி, மக்களையும் மனித உரிமைகளையும் பாதுகாக்கும் சனநாயகத்தைப் பாதுகாக்கும் போர்வையிலேயே இந்த நாட்டுக்கு வந்தனர்.

பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதில் உள்ள கஷ்டங்களை பலம்வாய்ந்த எல்லா நாடுகளும் அறிந்துகொள்ள வேண்டும். நாங்களும் அந்த நாடுகள் எதிர்நோக்கிய சவால்களைப் பார்க்கிலும் மிக மோசமான சவால்களை சந்தித்தோம். அந்த நாடுகளில் இருந்து நாம் வேறுபடுவது நாங்கள் பொது மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதை முதலாவது பொறுப்பாகக் கொண்டு செயற்படுமாறு முப்படையினருக்கும் கட்டளையிட்டிருந்தோம்.

அதேபோன்று பலம்வாய்ந்த நாடுகளில் காணப்பட்ட உள்நாட்டு யுத்தம் நிறைவுபெற்று நல்லிணக்க செயற்பாடுகள் வெற்றியடைய அவர்களுக்கு 50 வருடங்கள் 100 வருடங்கள் என காலம் தேவைப்பட்டது. என்றாலும் பயங்கர வாதத்தை ஒழித்துக் கட்டி 04 வருடங்களில் இவ்வளவு முன்னேறிய ஒரு நாடு உலகில் உள்ளதா என நாம் கேட்கிறோம்.

பிரிவினைவாத அரசியல் நிகழ்ச்சி நிரலைக் கொண்டுள்ளவர்கள் வழங்கும் தகவல்களுக்கு அமைய ஜெனீவா மனித உரிமைகள் குற்றச்சாட்டு எம்மீது சுமத்தப்படுவது ஒரு பாரதூரமான அநீதியாகும். இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் கொண்டுவர முயற்சிக்கும் யுத்தக் குற்றப் பிரேரணை சமாதானத்தை விரும்பாதவர்களின் வெற்றியாகும். இது ஒரு நாட்டின் இறைமை, சுதந்திரம், பாதுகாப்புக்காக நடவடிக்கை எடுக்கின்ற, சமாதானத்திற்காக அர்ப்பணத்துடன் செயற்படுகின்ற, ஒரு தேசத்தை பயமுறுத்தும் செயலாகும். இந்த முன்மொழிவு சமாதானத்தையோ நியாயத்தையோ

> 2009 மே 19ஆம் திகதிக்குப் பின்னர் இந்த 03 தசாப்த பிரச்சினை முடிவுக்கு வந்தது. எந்தவொரு வெடிகுண்டோ துப்பாக்கி சன்னமோ 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெடித்தது கிடையாது. எமது கிராமங்களில் வெள்ளைக் கொடிகள் கட்டப்படவும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடிப்படையாகக் கொண்டதல்ல. என்றாலும் எந்த நிலைமையிலும் பயமுறுத்தல் களுக்கு அடிபணிந்து நாங்கள் வெற்றிகொண்டுள்ள சுதந்திரத்தை இழக்க நாம் தயார் இல்லை என்பதை நாம் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறோம்.

இந்த நாட்டில் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் பாதுகாப்பது வெளியாரைப் பார்க்கிலும் எமது பொறுப்பாகும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறோம். அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் போது எங்களுக்கு கசப்பான கடந்தகாலம் நினைவுக்கு வருகிறது. கசப்பான அனுபவங்களை கடற்கரை மணலில் எழுதவும், நல்ல அனுபவங்களை கல்லில் செதுக்கவும் பழக வேண்டும். கடற்கரை மணலில் எழுதப்படுவது விரைவிலே அழிந்துபோகும். கல்லில் செதுக்கப் படுவது என்றும் நிலைத்திருக்கும். மணலில் எழுதி மறந்துவிட வேண்டியதையும், கல்லிலே செதுக்கி நினைவில் வைக்க வேண்டியதையும் நாம் அறிவோம்.

எங்களைக் கொலைசெய்ய வந்த பயங்கரவாதிகளையும் மன்னித்து அவர்களை இராணுவத்தில். பொலிஸில், சிவில் பாதுகாப்பு சேவையில் சேர்த்து அவர்களுக்கு நல்ல வாழ்வாதாரத்தையும் ஏற்படுத்திக்கொடுத்தது அந்த கசப்பான கடந்த காலத்தை மறந்துவிட்டேயாகும். பலி வாங்குதல் என்றுமே எமது கலாசாரமன்று. பயங்கரவாதத்தை தோற்கடித்தது போலவே தெற்கிலே பாதாள உலகை கட்டுப்படுத்தினோம். சட்டத்தை நிலைநாட்ட நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். நாங்கள் விதிக்கப்படாத சட்டங்களை விதிக்காது விதிக்கப்பட்ட சட்டங்களை பாதுகாத்தல் என்ற அடிப்படையில் செயற்படுகிறோம். புதிய சட்டங்களை விதிப்பதற்குப் பதிலாக நாங்கள் 30 வருடங்களாக இருந்து வந்த அவசரகால சட்டத்திற்கு முடிவு கட்டினோம். பயங்கரவாதத்திற்கு எதிராக போரிடுகின்ற போது ஊடகங்கள் எவ்வளவு தடைகளை ஏற்படுத்திய போதும் நாங்கள் ஊடகங்களை அடக்கும் சட்டங்களைக் கொண்டுவரவில்லை. வேறு நாடுகளுக்கு அடிபணிந்து சமாதானத்திற்கு எதிராக நாட்டுக்கு துரோகம் இழைக்கும் ஊடகங்களுக்குக்கூட இந்நாட்டில் கதவுகள் திறக்கப்பட்டே இருந்தது.

நாங்கள் பிரதேச சபைகள், மாகாண சபைகள், பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் களை நடாத்தியதன் காரணமாக இன்று கீழ்மட்ட சனநாயக நிறுவனங்களில் இருந்து ஜனாதிபதி பதவி வரை வடக்கு, கிழக்கு, தெற்கு என எல்லா இடங்களிலும் மக்கள் கருத்து பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது.

எனவே, எங்களது போட்டி பச்சை நீலம் என்பதோ, சிங்கள வர், தமிழர், முஸ் லிம்கள் என்பதோ அல்ல என்பதையும் எமது போட்டி நாட்டின் மீது அன்பு செலுத்துகின்றவர்களுக்கும் நாட்டுக்கு துரோகமானவர்களுக்கும் இடையி லானதாகும் என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தற்போது எமது நாட்டில் எல்லா சமயங்களையும் பின்பற்றும், பல்வேறு மொழிகளைப் பேசும் எல்லோரும் இன்று ஒரு ஐக்கியமிகுந்த தேசமாக அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க பாதையில் பயணிக்கின்றனர். எல்லா நாடுகளும் எமது இந்த சனநாயக பயணத் திற்கும் அபிவிருத் திக்கும் தேசிய சுதந்திரத்தைப் உறுதிப்படுத்தவும் மனித உரிமைகளை உறுதிப்படுத்தவும் எம்முடன் கைகோர்க்கு மாறு நான் அன்புடன் அழைக்கிறேன்.

இதற்கு முன்னர் சுதந்திர தினத்தில் நான் நினைவுபடுத்திய சுதந்திரத்தின் பெறுமதியைப்பற்றி சொல்கின்ற புத்தபெருமானின் போதனையை இன்றும் இந்த உலகுக்கு நினைவுபடுத்த வேண்டியது கடமையாகும். எமது புத்தபெருமானார் அம்பட்ட என்ற இளம் பிராமணருக்கு ஒரு பெண்குருவியை உவமையாக எடுத்து பெறுமதியான போதனையொன்றை வழங்கினார்.

சாணக்குருவி என்பது கமக்காரர் மண்ணை புரட்டுகின்றபோது மண்ணுக்கு கீழே இருக்கின்ற குறுகிய இடத்தை கூடாக அமைத்துக்கொண்டு வாழ்கின்ற ஒரு பெண் குருவி. நமது கிராமப் பகுதிகளில் அந்த பெண் குருவியை கொமறித்தா என்று அழைக்கின்றனர். அல்லது சாணக் குருவி என்று அழைக்கின்றனர்.

சானக்குருவிக்கு கூட அதன் கூட்டில் அதற்கு தேவையான விதத்தில் வாழக்கூடிய உரிமை இருக்க வேண்டும். இலங்கைவாழ் மக்களும் அப்படித்தான். அதனால் எனது நாட்டு மக்களுக்கும் இந்நாட்டில் சுதந்திரமாக வாழ உரிமை இருக்க வேண்டும்.

உங்கள் அனைவருக்கும் வளமான எதிர் காலத்திற்கு வாழ்த்துகிறேன். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடகங்களின் சுய கட்டுப்பாடு



**கலாநிதி. சி. ரகுராம்**
சிரேஷ்ட விரிவுரையாளர் – தொடர்பாடல் கற்கைகள்
திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

## ஊடக சுதந்திரம் – வெளியும் வரையறைகளும் (Media Freedom – Space and Limitations)

**ஊ**டக சுதந்திரம் தொடர்பில் இன்று உலகளாவிய கவனம் அதிகளவில் செலுத்தப்படுகிறது. ஜனநாயகத்தின் உறுதிப்பாடாக ஊடகங்களின் சுதந்திரமான செயற்பாடு கருதப்படும் அதேவேளை , ஒரு நாட்டில் நிலவக்கூடிய ஜனநாயக ஆட்சியை மதிப்பிடும் அளவு கோலாகவும் ஊடக சுதந்திரம் காணப்படுகிறது. அந்தளவில் ஊடக சுதந்திரத்தின் முக்கியத்துவம் ஜனநாயக விழுமியங்களின் பால் இரண்டறக் கலந்து இயைபாக்கம் அடைந்திருக்கிறது.

ஒவ்வொரு நாட்டினதும் சட்டவாட்சி வழியேயும், அரசியலமைப்பிலும் சர்வதேச அளவில் ஐக்கிய நாடுகள் அவையினதும் மனித உரிமை அமைப்புகளதும் பிரகடனங்களிலும் கருத்து வெளிப்பாட்டுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பும், அது அடிப்படை மனித உரிமைகளுள் ஒன்றாகச் சிறப்பிக்கப்பட்டிருப்பதும் – ஊடக சுதந்திரம் தொடர்பிலான சட்ட மற்றும் அரசியலமைப்புப் பாதுகாப்பினை உறுதிப் படுத்துகின்றன.





அதேவேளை, இது தனியே ஊடகங்களுக்கான சுதந்திரத்தை மாத்திரம் கணிப்பிலெடுக்கும் வரையறை யிலிருந்தும் விலகி, தனிமனித சுதந் திரத்தின் வெளிப் பாடாகவும் அந்த சுதந்திரத்தின் அளவு மீது நேரிடைத் தொடர்பினைக் கொண்டிருப் பதாகவும், மனித உரிமை ஆர்வலர் களால் நோக்கப்படுவது, ஊடக சுதந்திரம் மீதான முக்கியத் துவத்தை மேலும் அதிகரிக்கின்றது.

ஆனால், யதார்த்தத்தில் ஊடக சுதந்திரம் எந்தளவுக்குப் பேணப்படுகிறது, ஊடகங்கள் தமக்கான கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை அனுபவிக்கக் கூடியதாக இருக்கிறதா என்ற கேள்விகள் எழுவதும் தவிர்க்க முடியாததாகிறது. குறிப்பாக, ஊடக சுதந்திரம் முக்கிய அடயாளக் குறியீடாக விளங்கும் ஜனநாயகத்தில், ஊடகங்கள் தமக்குரிய கௌரவமான, கண்ணியமான இடத்தைத் தக்கவைப்பது பெரும் போராட்டமாக இருப்பது மாத்திரமின்றி – ஊடக சுதந்திரத்தின் அப்பட்டமான மீறல்களாக ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் அச்சுறுத்தல்களும் உயிர்ப்பலி கொள்ளும் அளவுக்கான வன்முறைப் போக்கும் கட்டவிழ்த்து விடப்படுவது ஊடகங்கள் மீதான சுதந்திரத்தைக் கேள்விக்குள்ளாக்குகின்றன.

கருத்து வெளிப்பாடு மீதான மதிப்பும் சகிப்புத்தன்மையும் அல்லது கருத்தைக் கருத்தால் எதிர்கொள்ளும் திராணியும் மிகக்குறைந்துவிட்ட சமூகத்தில் ஊடக சுதந்திரத்தின் இருப்பு மீதான சந்தேகங்கள் வெளிப்படும் அதேவேளை, ஆக இயலுமான வகையிலாவது ஊடக சுதந்திரத் திற்காகப் போராடும் கட்டாயத்தில் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் இருப்பதை மறுக்க முடியாதிருக்கிறது.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல, ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும் ஒரு சமூகத்தில் மாத்திரமே தனிமனித சுதந்திரங்களும் சாத்திய மாகும் என்ற யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளும் இடத்து ஊடக சுதந்திரத்திற்காகப் போராடுவது என்பது ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர் களுக்கும் மாத்திரமே உரித்தான கடமை என்ற நிலையிலிருந்தும் விலகி, சிவில் சமூகமும் மக்களும் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் முயற்சிகளுக்கு உறுதுணையாயிருக்க வேண்டியது அவசியமாகிறது. அதுவே ஊடகங்கள் வழி ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்குமான வழியுமாகும்.

இதேவேளை, ஊடக சுதந்திரத்தின் பேரில் அதீதமான அல்லது தாம் நினைத்ததையெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யக்கூடிய, மீறல்கள் நிறைந்த கருத்து வெளிப்பாட்டுச் சூழல் ஒன்றைக் கட்டமைக்க சில ஊடகங்கள் முயல்வதும் கருத்திலெடுக்கப்பட வேண்டியிருக்கிறது.

சுதந்திரம் என்பது அவசியமானது என்பதுடன், அதன் வரையறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் வேளையிலேயே சுதந்திரம் என்பது மற்றையவர்களைப் பாதிக்காத சுதந்திரமாக இருக்கும் என்ற கருத்திற்கமைய ஊடக சுதந்திரத்தின் ஒரு முக்கிய அங்கமாக, ஊடகங்கள் தமக்கான சுதந்திரத்தை எவ்வாறு வரையறுத்துக் கொள்ள வேண்டும் என்பதை, "ஊடகங்களின் சுயகட்டுப்பாடு" (Media Self- Regulation) வலியுறுத்துகிறது.

ஊடகங்களின் சுயகட்டுப்பாடு
(Media Self -Regulation)

மக்கள் அரச ஆளுமையில் பங்கெடுக்கக் கூடிய நிலையை ஊக்குவிக்கும் பணிக்கும் தமது மிகப்பாரிய பலத்தை துஷ்பிரயோகம் செய்யக்கூடிய நிலையைத் தவிர்க்கும் நியாயமான வரையறைகளுக்கும் இடையிலான சமநிலையை முன்னகர்த்து வதாக ஊடகங்களின் சுயகட்டுப்பாடு அமைகிறது.

எங்கெல்லாம் மிகப்பாரிய பலம் செறிந்துள்ளதாகக் கருதப்படுகிறதோ, அங்கெல்லாம் அந்தப் பலத்தின் பேரால் தவறுகளும் துஷ்பிரயோகங்களும் இடம்பெறுவதும் உண்மையாயிருக்கிறது. இது அரசியலுக்கு மாத்திரமல்ல ஊடகங்களுக்கும் பொருத்தமானதே. மிகப் பரந்த அளவிலும் மிகத் துரிதமான வகையிலும் பெருந்தொகை மக்களை அணுகக்கூடிய, அவர்களது கருத்தியல்களில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய ஊடகப்பலம் இன்று நிதர்சனமாகியிருக்கிறது. குறிப்பாக, இலத்திரனியல் ஊடகங்களும், புதிய இணைய ஊடகங்களும் இந்தச் செல்நெறியில் சமீப காலங்களில், பூகோள அளவில் தமது பாதிப்புக்களை எடுத்துக்காட்டியிருக்கின்றன.

இத்தகைய பலம், ஊடக சுதந்திரத்தின் பேரால் மாறுபட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படாமல் இருப்பதையும், தமது நியாயமான செயற்பாடுகளுக்கு மாத்திரமே ஊடக வலையமைப்பு பயன்படுத்துகின்றது என்பதை ஊடகங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஊடகங்கள் தமக்கான நியாயபூர்வமான கட்டுப்பாடுகளைத் தாமாகத் தமக்கு விதித்துக் கொள்ளத் தவறும் பட்சத்திலேயே, வெளியிலிருந்தான தலையீடுகள் தமக்குரிய நியாயத்தைத் தேடிக்கொள்கின்றன என்பதையும் அவை கருத்திற்கொள்ள வேண்டும்.

சரியான தகவல்களை வழங்குவதற்கான உரிமையைக் கொண்டிருக்கும் ஊடகங்கள், தவறான தகவல்களை வழங்கும் உரிமை தமக்கு இல்லாதிருப்பதையும் ஒத்துக் கொள்ள வேண்டும்.

> **"ஊடகங்கள் தமக்கான நியாயபூர்வமான கட்டுப்பாடுகளைத் தாமாகத் தமக்கு விதித்துக்கொள்ளத் தவறும் பட்சத்திலேயே, வெளியிலிருந்தான தலையீடுகள் தமக்குரிய நியாயத்தைத் தேடிக்கொள்கின்றன என்பதையும் அவை கருத்திற்கொள்ள வேண்டும்."**



தனிநபர்களையும் அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையையும் இலக்காகக் கொண்ட செய்திகளை வெளியிடும் போது, மிகக் கவனமான பிரயோகங்களை ஊடகங்கள் கொண்டிருக்க வேண்டியது இங்கு மிகக் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

அதே போன்று, பல்லின சமுதாயங்கள் வாழக்கூடிய சமூகத்தில், குறிப்பாக போரின் பின்னரான இலங்கை போன்ற சமூகத்தில் முரண்பாட்டு உணர்திறன்மிக்க ஊடகவியலின் (Conflict Sensitive Journalism) பெறுமதியை ஊடகங்கள் தமது பயன்பாட்டுக் களத்திற்கு எடுத்துவர வேண்டிய தேவை பெருகியிருக்கிறது. இன, மத, மொழி ரீதியான பிரிவுகள் நிறைந்த சமூகத்தில் செய்திகள் செய்திகளாக மாத்திரமின்றி, அவை மக்களிடையே ஒன்றிணைப்புக்களையும் பிளவுகளையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுப்படுத்த வல்லவையாகவும் இருப்பதை இங்கு கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

அரசியல் தவிர்ந்த ஊடகப்பயன்பாடு என்பது இன்று வெறுமனே எழுத்துக்களில் மாத்திரமே சாத்தியமாகக்கூடிய நிலையில், இயலுமான வகையில் அரசியல் தொடர்பாடலை (Political Communication) தகுந்த சமநிலையுடன் அணுகும் போக்கை ஊடகங்கள் நெறிப்படுத்தும் தேவையும் எழுந்திருக்கிறது. குறிப்பாக, தேர்தல்கள் போன்ற சமநிலைப் பண்பு அதிகம் பேணப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் ஊடகங்களின் போக்கு தொடர்பில் அதிகம் பேசப்பட வேண்டியுள்ளது. விளம்பரங்கள் மாத்திரம் இன்றி, கட்டணம் செலுத்தப்பட்ட செய்திகள் அல்லது விலைக்கு வாங்கப்பட்ட செய்திப்பக்கங்கள், செய்திக் கட்டுரைகள் (Paid News and News Articles) – அரசியல் தொடர்பாடலில் ஊடகங்களின் பணியைக் கொச்சைப்படுத்தி வருவதை ஊடக அறநெறி அனுமதிக்க முடியாது.

ஊடக சுய கட்டுப்பாடு, முதன்மையும் முக்கியமானதுமான ஊடக செல்நெறியைத் தீர்மானிக்கக்கூடிய சட்டரீதியான தலையீடுகளுக்கு அப்பால் – பெறுநர்கள், நலன் விரும்பிகள், ஊடக உரிமையாளர்கள், விளம்பரதாரர்கள், சக தொழிலாண்மையாளர்கள், சிவில் சமூகம் என பல தரப்பிலிருந்துமான செல்வாக்குகளுக்கு உட்பட்டே இயங்கிவருகிறது. இங்கு, இந்தச் செல்வாக்குகள், தனியே செல்வாக்குகள் என்ற நிலையிருந்து மேலெழுந்து “பொறுப்புமிக்க செல்வாக்குகள்” (Responsible Influences) என்ற நிலைக்கு வரும்போதே அல்லது அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும்போதே ஊடக சுய கட்டுப்பாடு, தகுந்த பெறுமதிகளைத் தரக்கூடியதாக அமையும். அந்தவகையில், இங்கு ஒரு “கூட்டுப் பொறுப்புணர்வு” (Joint Responsibility) வேண்டியிருப்பதை வலியுறுத்த வேண்டியுள்ளது.


இவற்றைக் கருத்திற் கொண்டு, ஊடகங்கள் தமக்கான பொறுப்புக்கூறலை (Accountability) உறுதிப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை, தன்னார்வத்தின் வழியே தாமாக உருவாக்கும் பொறிமுறைக்கிணங்க (Voluntary Mechanism) அமைத்துக்கொள்வதே சாலச் சிறந்ததாகும். இவ்வாறான பொறிமுறையொன்றே யதார்த்தமானதாகவும், குறித்த ஊடகங்களின் பார்வையில் நடைமுறைச் சாத்தியமானதாகவும் அமையும்.

இது, ஊடக சுயக்கட்டுப்பாடு (Media Self-Regulation) என்னும் நிலையிலிருந்தும், குறிப்பாக பத்திரிகை முறைபாட்டுச் சபை (Press Complaints Commission) போன்ற அமைப்புக்களிலிருந்தும் இன்னும் முன்னேறி, ஊடகங்கள் தமதளவில் தமக்கான ஒரு ஊடக சுய அடக்கம் (Media Self-Control) என்பதை நோக்கியதாக இருப்பின் இன்னும் சிறப்புடையதாக இருக்கமுடியும்.

இப்பொறிமுறை ஒவ்வொரு ஊடகத்திற்கும் அவற்றின் செயற்பாட்டுப்பரப்பு குறித்தும், அவற்றின் ஊடகக்கொள்கைகள் குறித்தும் வேறுபட்ட பரிமாணங்களை கொண்டதாக இருந்தாலும், பொதுவில் – அடிப்படையான ஊடக அறநெறிகள், அவற்றின் பொதுப் பண்புகளாக அமைய முடியும்.

அதேவேளை, இப்பொறிமுறையானது, ஊடகச் செயற்பாட்டின் இரு நிலைகளிலும் இயங்க முடியும். ஒன்று வெளிப்பாட்டுக்கு முன்னரான நிலை. மற்றையது வெளிப்பாட்டுக்குப் பின்னரான நிலை. இவ்விரு நிலைகளிலும் ஒரு செய்தியை வெளிப்படுத்துவதற்கு முன்னர் இப்பொறிமுறை முறையாக இயங்குமாக இருந்தால், இரண்டாம் நிலைக்குத் தேவை ஏற்பட மாட்டாது. இது, கிட்டத்தட்ட “வரு முன் காப்போம்” பொறிமுறைக்கு ஒப்பானது. இது, குறித்த ஊடகத்தின் நற்பெயரையும் காக்கக்கூடியது. அதே வேளை, மனிதத் தவறுகளுக்கான வழிகள் ஊடகங்களிலும் இருப்பதால், நேர்ந்துவிட்ட தவறுகளுக்கு பிராயச்சித்தம் தரும் வழியை இரண்டாம் நிலை தந்துவிடமுடியும்.

இப்பொறிமுறைகள், ஏற்கனவே வெவ்வேறு படிநிலைகளில் ஊடகங்களில் அனுமதிக்கப் பட்டிருதாலும், முழுமையான தன்னார்வப் பொறிமுறையொன்றின் தேவை ஒவ்வொரு ஊடகங்களுக்கும் இன்று அவசியமாகவுள்ளதை எடுத்து கூறவே வேண்டியுள்ளது. அதுவே, ஊடகங்களின் தொழில்சார் பண்பையும் (Professional Journalism) உயர்த்திச்செல்லும். ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் பிராயத்தினரின் திறன்களை விருத்தி செய்யும் வழிமுறைகள்



குழந்தைகள் நாட்டின் எதிர்காலமாகவே கணிக்கப்படுகின்றனர். அதன்படி இளம் பிராயத்தினர் அதாவது 10-19 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் எதிர் காலத்துக்கு வழிகாட்டும் ஜீவ நாடிகளாகும். எமது நாட்டில் பாடசாலைக் கல்வி பெறும் 3.9 மில்லியனுக்கு மதிகமான பிள்ளைகளில் 60% அதாவது இந்நாட்டின் சனத் தொகையில் 19.7% இளம்பிராயத்தினரை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. உலக சனத்தொகையைப் பார்க்கும் போது 19% அதாவது 1.2 பில்லியனை பிரதிநிதித்துவப் படுத்துவது இளம் பிராயத்தினராவர்.

ஒருவரின் வாழ்க்கையில் சுவாரஷ்யமான காலம் இளம் பிராயம் தான். ஆனால் தற்கால போட்டித்தன்மை மிக்க வாழ்க்கை முறையில் விசேடமாக போட்டித்தன்மை மிக்க கல்வி முறை காரணமாக இளம் பிராயத்தினருக்கு கல்வியைப் போலவே சமூக சவால்கள் பலவற்றுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. நிகழ்கால சந்தைகளின் தேவைகளுக்குப் பொருத்தமான கல்வியைப் பெற்றுக் கொள்ளல், அந்த கல்வித் தகைமைகளுக்கு ஏற்ற ஒரு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வது, வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களுக்கு வெற்றிகரமாக முகங் கொடுக்கும் தேவை என்பன அவற்றுள் சிலவாகும்.

இவ்வகையில் நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் பலவித சவால்களுக்கு முகங் கொடுக்கக் கூடிய திறன் நிபுணத்துவம் என்று அழைக்கப் படுவதாக குடும்ப சுகாதார செயற்பாட்டுப் பிரிவின் பாடசாலை மற்றும் முதியோர் சுகாதாரப் பிரிவின் தலைவர் வைத்திய நிபுணர் அயேஷா லொகு பாலசூரிய கூறுகிறார். அதற்காக இல்லாவிட்டாலும் எமக்குள் விருத்தி செய்து கொள்ளக் கூடிய பலதரப்பட்ட குணங்களுக்குத் தேவைப்படும் சிறந்த நடத்தைகளை வாழ்க்கைத் திறன்களாக குறிப்பிடலாம். அவ்வாறு இளம் பிராயத் தினருக்குத் தேவைப்படும் வாழ்க்கைத் திறன்கள் விருத்தியடை யாமையால் அவர்கள் பயங்கரமான நடத்தைகளில் ஈடுபடுவது தற்காலத்தில் சமூக பிரச்சினைகள் என்றளவுக்கு விருத்தியடைந்துள்ளது. முற்காலத்தில் பிள்ளைகளின் திறன்கள் வளருவதற்குத் தேவையான சூழல், வீடு, பாடசாலை மற்றும் சுற்றுப்புறம் என்பன சமூகத்தினுள் காணப் பட்டது. இன்று அப்படியல்ல. பிள்ளைகள் இலகுவாகவே பிழையான நடவடிக்கைகளில் அல்லது பயங்கரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளம் பிராயத்தினர் இத்தகைய பயங்கர நடவடிக்கைகளுக்கு ஊக்குவிக்கப்படுவது தொடர்பாக கவன மெடுக்க வேண்டியதோடு அதன்பால் சமூகத்தின் கவனமும் திரும்ப வேண்டிய ஒரு பயங்கரமான சமூகக் காரணியென்று விஷேட மன நோய் வைத்திய நிபுணர் நீல் பெர்னாண்டோ குறிப்பிடுகிறார்.**

நடத்தைகளில் ஈடுபடலாம் என்று வைத்திய கலாநிதி லொகு பாலசூரிய குறிப்பிடுகிறார். துஷ்பிரயோகம், தற்கொலை செய்து கொள்ளல், ஆக்கிரமிப்புத் தன்மை, வன்முறை என்பன இளம் பராயத்தினர் ஈடுபடும் சில பயங்கரமான நடத்தைகளாகும். 2004 ஆம் ஆண்டு யுனிசெப் நிறுவனம் மேற்கொண்ட ஓர் ஆய்விற்கமைய இலங்கையில் காணப்படும் இளம் பராய ஆண் பிள்ளைகளில் 6% மதுபானத்துக்கும் புகைத்தலுக்கும் அடிமையாகியுள்ளனர். அப்பிள்ளைகளில் 18% எப்போதாவது ஒருநாளில் அவற்றை உட்கொண்டிருக்கின்றனர். பெண் பிள்ளைகளில் 1%னர் மதுபானம், புகைத்தலிலும் ஈடுபடுகின்றனர். அதேபோல் வயதோடு கூடவே மதுபானத் தினதும் புகைத்தலினதும் பாவனையும் அதிகரித்துள்ளது. 17-19 வயதுக்கிடையிலான ஆண் பிள்ளைகளில் 32% மதுபானம் மற்றும் புகைத்தலில் ஈடுபட்டுள்ளனர்.

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற Global School Health Surveyயின் படி மாணவர்களில் 48.8% தனது நண்பன் ஒருவரிடமிருந்து அல்லது அவரோடு ஒத்த வயதுடைய குழுவொன்றிடமிருந்து உடல் ரீதியில் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். 37.5% துன்புறுத்தல் காரணமாக கடும் காயங்களுக்குட்பட்டிருக்கின்றனர். 10.4% தமக்கு தற்கொலை செய்து கொள்ள எண்ணம் வந்ததாக கூறியதோடு பிள்ளைகள் மத்தியில் 13.5% ஒரு பிரச்சினைக்கு இருக்கும் சிறந்த தீர்வு தற்கொலை என்றே நினைக்கின்றனர். 7.5% தனிமை காரணமாக துன்பப்படுகின்றனர். இந்த வகையில் துஷ்பிரயோகம், துன்புறுத்தப்படல், தனிமை, தனிமைப் படுத்தப்படல் போன்ற காரணங்களினால் பிள்ளைகளின் திறன்கள் விருத்தியடைவ தில்லை. அது பிள்ளைகளுக்குள் பயங்கர நடத்தைகளை விருத்தி செய்வதுடன் அவர்களின் தன்னியல்பு விருத்தியடையாமை, தற்றுணிவு, தன்னம்பிக்கை விருத்தியடையாமை என்பவற்றில் நேரடியாகவே பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

இந்த வகையில் இளம் பிராயத்தினர் இத்தகைய பயங்கர நடவடிக்கைகளுக்கு ஊக்குவிக்கப்படுவது தொடர்பாக கவன மெடுக்க வேண்டியதோடு அதன்பால் சமூகத்தின் கவனமும் திரும்ப வேண்டிய ஒரு பயங்கரமான ஒரு சமூகக் காரணியென்று விஷேட மன நோய் வைத்திய நிபுணர் நீல் பெர்னாண்டோ குறிப்பிடுகிறார். பிள்ளைகள் இத்தகைய பயங்கர நடத்தை களில் ஈடுபடுவது ஏன்? விஞ்ஞான ரீதியில் இவ்விடயத்தை நாம் பார்க்கும் போது 19 வயது வரை பிள்ளைகளின் மூளையானது பூரணமாக விருத்தியடையாமையே காரண மாகும். ஒருவரின் மூளை விருத்தியடைவது மயலின் (ஒரு வகை இலிப்பிட்டு) படிந்திருப்ப தனாலாகும். பிற்பகுதியி லிருந்து முற்பக்கமாகவே வளர்ச்சி ஏற்படுகின்றது.

15 வயதாகும் போது மூளையின் நடுப்பகுதி விருத்தி யடைந் திருக்கும். மூளையின் நடுப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகுதியினால் தான் சிந்திக்கும் வேகம், உணர்வுகளை ஏற்படுத்து கின்றது. தீர்மானமெடுப்பது, திட்டமிடுவது, ஒழுங்கு முறையில் பழகுவது போன்றவற்றைக் கட்டுப் படுத்தும் மூளையின் முன் பக்கம் விருத்தியடைய 22-25 வயதாக வேண்டும். இதனால் இளம் பராயத்தினரின் சிந்தனைச் சக்திக்கு ஒரு கட்டுப்பாடு இல்லை. உடனே செயற்படுகின்றனர். வளர்ச்சியடையாத மூளையானது மதுபானத்துக்குப் பழக்கப் பட்டால் ஒரு வரையறை தெரியாது என்பதனால் அப்பழக்கத்துக்கு அடிமையாகலாம். எனவே இளம் பிராயத்தினருக்கு சரியான வழி முறைகளைக் காட்டுவது அவசியமாகும் என்று வைத்திய நிபுணர் லொகுபாலசூரிய குறிப்பிடுகிறார்.


இந்த வகையில் இளம்பராய பிள்ளைகளை ஊக்குவிக்கும் பயங்கரமான நடத்தை களிலிருந்து அவர்களை தடுக்க அவசியம் செய்ய வேண்டியது என்ன? அங்கொடை மனநோய் கல்லூாரியின் மனோ வைத்திய நிபுணர் நீல் பெர்னாண்டோ குறிப்பிடுகையில் பிள்ளைகளின் திறன்களின் விருத்திக்கு இடமளிப்பது பிரதான தேவையாகின்றது என்கிறார். தீர்மான மெடுக்கும் இயலுமை, பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது, படைப்பாறல் மிக்க சிந்தனை, விமர்சிக்கும் சிந்தனை, பயனுள்ள தொடர்பாடல்கள், ஒவ்வொருவருக்கிடையிலான தொடர்புகள், தற்புரிந்துணர்வு, சிந்தனைச் சக்தி, ஒரு விடயத்தில் ஆர்வம், படபடப்புமிக்க மனநிலை என்பவற்றுக்கு முகங் கொடுக்க திறன்களை சிறந்த முறையில் விருத்தி செய்து கொள்ள சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இதைத்தவிர பிள்ளைகளை உடற்பயிற்சிகளில் ஈடுபடுத்தல், பெற்றோர்களுக் கிடையிலான தொடர்புகளை சிறந்த முறையில் கட்டியெழுப்பல், பாலியல் வாழ்க்கை பற்றி அறிவு புகட்டல், மதத்தோடு தொடர்புடைய ஓர் சூழலில் வளர்க்கப்படல், ஊக்குவித்தல், வழிகாட்டல் மற்றும் எடுத்துக்காட்டாக இருப்பது போன்றன மிக முக்கிய மானவைகளாகும்.

எவ்வாறெனினும் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருப்பது எல்லாவற்றையும் பணத்துக்கு திறந்து விடப்பட்ட ஒரு வர்த்தக சமூகத்தில். இச்சமூகத்தில் சரியான ஒரு திசையில் பயணம் செய்ய வேண்டுமானால் பிள்ளைகளுக்கு பெற்றோர், ஆசிரியர் போலவே பொதுவாக சமூகத்தினது வழிகாட்டல்களை பாதுகாத்துக் கொள்வதும் அவசியமாகும். இச்சந்தர்ப்பத்தில் ஊடகத் துறையின் பங்களிப்பு பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. ■




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

International Relation



# ஜனாதிபதி நாட்குறிப்பு

## ஐஸ்லாந்து ஜனாதிபதியுடனான சந்திப்பு



யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து இலங்கை தெளிவான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. அதனால் எஞ்சியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கால அவகாசம் மிக அவசியமானது. அதைவிடுத்து காலவரையறை நிர்ணயிப்பது பயனளிக்காது என்று ஐஸ்லாந்து நாட்டின் ஜனாதிபதி ஒலாபுர் ரக்நர் கிறிம்சன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திற்கு ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐஸ்லாந்து ஜனாதிபதியை அபூதாபி நகரிலுள்ள எமிரேட்ஸ் பலஸ் ஹோட்டலில் சந்தித்து இருபக்க பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

இப்பேச்சுவார்த்தையின் போதே ஐஸ்லாந்து நாட்டின் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தாம் இதற்கு முன்னர் இரு தடவைகள் சந்தித்ததை நினைவு கூர்ந்ததுடன் மீண்டும் அவரை சந்திக்கக் கிடைத்த திருப்தியையும் ஐஸ்லாந்து ஜனாதிபதி வெளியிட்டார்.

இப்பேச்சுவார்த்தையின் போது அவர் மேலும் குறிப்பிடுகையில், “எம்மிரு நாடுகளுக்கு மிடையிலான தொடர்பாடலை வளர்க்க வேண்டும்” என்பதே என் கருத்து என்று குறிப்பிட்ட ஐஸ்லாந்து ஜனாதிபதி கடற்றொழில், இறைச்சி உற்பத்தி மற்றும் பழச் செய்கை ஆகிய துறைகளில் வர்த்தக அடிப்படையிலான திட்டங்களை இலங்கையுடன் ஆரம்பிப்பதற்குரிய யோசனையையும் அவர் தெரிவித்தார்.

“இந்த உற்பத்திகளுக்காக 50,60 நாடுகளில் திருப்திகரமான சந்தை வாய்ப்பு நிலவுவதாகவும் ஐஸ்லாந்து ஜனாதிபதி குறிப்பிட்டார். இத்துறைகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தை ஐஸ்லாந்து நவீனப்படுத்தி மேம்படுத்தியுள்ளதாகவும் அதன் பயனாக மீன், இறைச்சி மற்றும் பழ வகைகளை நீண்ட காலமாகப் பாதுகாப்பாக வைக்க முடிந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐஸ்லாந்து ஜனாதிபதியின் யோசனைப்படி இருபக்கத் தொடர்பாடலை மேம்படுத்துவதற்கு இணக்கம் தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நான்கு வருடங்களுக்கு முன்னர் முரண்பாடு முடிவுற்றது. அதனைத் தொடர்ந்து இலங்கை அடைந்துள்ள அபிவிருத்தி முன்னேற்றங்கள் குறித்து தெளிவுபடுத்தினார்.

இதன் போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சகல கண்ணிவெடிகளும் அகற்றப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்திருந்த மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். முன்னாள் போராளிகள் சுமார் 11,000 பேருக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு அவர்கள் சமூகத்தில் இணைக்கப் பட்டுள்ளனர்.

சுமார் 2000 சிறுவர் போராளிகளை அவர்களது பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார். நெடுஞ்சாலைகள், சுகாதாரம், நீர் வழங்கல் மின்சாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளின் உட்கட்டமைப்பு அபிவிருத் திக்காக பாரியளவிலான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

வட மாகாண சபைத் தேர்தலை நடாத்தி அங்கு வாழும் மக்கள் விரும்பும் பிரதிநிதிகளை நிர்வாகத்திற்காகத் தெரிவு செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தோம். என்றாலும் இந்த யதார்த்தத்தைக் கண்டு கொள்ளாதவர்கள் இலங்கைக்குப் பாரிய அழுத்தம் கொடுக்கின்றனர் என்றும் ஜனாதிபதி கூறினார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6-

# ஜனாதிபதியின் மத்திய கிழக்கு விஜயம்



இஸ்ரேலுக்கு உத்தியோக பூர்வ பயணம் மேற் கொண்ட ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ ஜெரூ சலம் நகரத் திலுள்ள ஜனா திபதி செயலக த்தில் வைத்து இஸ்ரேலிய ஜனாதிபதி ஷிமோன் பெரஸை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச்சந்திப்பின் போது ஜனாதிபதியின் தலைமைத்துவத்தை பெரிதும் பாராட்டிய இஸ்ரேலிய ஜனாதிபதி "ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் இலங்கை பெற்றுக்கொண்டுள்ள நன்மைகள் கவர்ச்சிகரமான சாதனைகளாகும்" என்றும் 30 ஆண்டுகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அபிவிருத்தியையும் ஐக்கியத்தையும் மோலோங்கச் செய்துள்ள ஜனாதிபதியின் செயற்பாட்டினை இஸ்ரேலிய ஜனாதிபதி பெரிதும் பாராட்டினார்.

செல்வாக்கான வரலாறு மற்றும் மிகவும் புத்தி கூர்மையுள்ள மக்கள் இலங்கையில் இருப்பதாகவும் இஸ்ரேலிய ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

2004 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது இஸ்ரேல் அரசு வழங்கிய உதவிகளுக்கு ஜனாதிபதி இதன் போது நன்றி தெரிவித்தார்.

இஸ்ரேல் -பலஸ்தீன் மோதலுக்கு தீர்வாக இரு நாடுகளிலும் வேறு ஆட்சிகளை அமைப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் சிபார்சுக்கு தாம் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்

இதனையடுத்து, இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் இஸ்ரேல் வர்த்தக பிரமுகர்களையும் ஜனாதிபதி சந்தித்தார். இரு நாடுகளுக்கிடையில் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப் பட்டது.

அடுத்து ஜெரூசலம் வனவியல் பூங்காவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி தனது விஜயத்தின் ஞாபகார்த்தமாக ஒலிவ் மரக்கன்று ஒன்றையும் நாட்டி வைத்தார். ■












Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு "பலஸ்தீனத்தின் நட்சத்திரம்" அதி உயர் விருது!

முன்னாள் பலஸ்தீன் ஜனாதிபதி யசிர் அரபாத்துக்கும் தற்போதைய ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸுக்கும் இலங்கை மக்கள் சார்பாக "ஸ்ரீ லங்கா மித்ர விபூஷன" விருதினை ஜனாதிபதி ராஜபக்ஷ வழங்கினார். பலஸ்தீனத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பலஸ்தீனத்தின் பெட்டுனியா நகரத்தில் "மஹிந்த ராஜபக்ஷ தொழிற்பயிற்சி நிலையத்தை" திறந்து வைத்தார். சுற்றுலாத்துறை போன்ற இலங்கைக்கு சிறப்பறிவுள்ள துறைகளில் பலஸ்தீன் இளைஞர் யுவதிகளுக்கு துறைசார்ந்த இலங்கையர்கள் மூலம் இங்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

"இலங்கைக்கும் பலஸ்தீன அரசுக்குமிடையிலான உறவு தனித்துவமானது, பலஸ்தீன அரசுக்கும் நட்புறவுமிக்க பலஸ்தீன் மக்களுக்கும் நாம் எப்போதும் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்" என இவ்விருது வழங்கும் விழாவின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். பலஸ்தீன் அரசின் அதியுயர் விருதான "பலஸ்தீனின் நட்சத்திரம்" (ஸ்டார் ஒப் பலஸ்தீன்) விருதினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பலஸ்தீன் அரசாங்கம் வழங்கி கௌரவித்தது.

முன்னாள் பலஸ்தீன் ஜனாதிபதி யாசிர் அரபாத்துக்கும் தற்போதைய ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸுக்கும் இலங்கை மக்கள் சார்பாக "ஸ்ரீ லங்கா மித்ர விபூஷன" விருதினை ஜனாதிபதி ராஜபக்ஷ வழங்கினார். ■






ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் ஜனாதிபதி

ஐக்கிய அரபு இராச்சியம் இலங்கைக்கு உதவத் தயாராக உள்ளது என அந்நாட்டின் பிரதமரும் உதவித் தலைவரும் துபாய் ஆட்சியாளருமான ஷேக் முஹமட் பின் ராஷித் அல் மக்தூம்(Sheikh Mohammed bin Rashid Al Makdhoom) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் உறுதியளித்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் பிரதமருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நிலைமைகளையும் கள யதார்த்தங்களையும் தாம் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளதாக ஷேக் முஹமட் ஜனாதிபதியிடம் தெரிவித்தார். இலங்கையில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் முதலீடுகளை அதிகரிப்பதற்கும் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கும் ஷேக் முஹமட் தனது விருப்பத்தை தெரிவித்தார். ■

## ஜோர்தான் பயணம்



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜோர்தான் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஹசேமியிட் மாளிகையில் அந்நாட்டு மன்னர் இரண்டாம் அப்துல்லா இபின் அல் ஹுசைனை சந்தித்தார்.

இந்த உத்தியோகபூர்வ சந்திப்பின்போது ஜனாதிபதியை கௌரவத்துடன் வரவேற்ற மன்னர் ஹுசைன் இரு நாட்டை தொடர்பு படுத்தக்கூடிய பல்வேறு துறைகள் தொடர்பாக கலந்துரையாடினார். பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பு மற்றும் 2007 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட வர்த்தக மற்றும் பொருளாதார ஒப்பந்தத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட ஒருங்கமைப்பு குழு தொடர்பாக இச்சந்திப்பின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாகற்காயின் மருத்துவ குணங்கள்

கசப்பான மரக்கறி வகை ஒன்றை ஞாபகமூட்டும் போது தானாகவே ஞாபகம் வரும் மரக்கறி வகை பாகற் காயே. எந்தளவுக்கு கசப்பான உணவாக பாகற்காய் இருந்த போதும், அது மனித வாழ்க்கையில் இன்பமான பிரதிபலனையே பெற்றுத் தரும். அந்த அளவுக்கு பாகற் காயில் போசணை நிறையக் காணப்படுகிறது. அது எந்தளவு கசப்பாக இருந்த போதிலும் அதன் போசணையை பெற்றுக் கொள்ளும் நிமித்தம் பெரும்பாலானோர் இதனை உணவாக உட்கொள்கின்றனர்.

இலங்கையில் வறண்ட பிரதேசங்களில் செழிப்பாக வளரும் பாகற்காய், பெரும்பாலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பிரதான போசணை அடங்கிய உணவு வகையாக கணிக்கப் படுகிறது. இலங்கை, பாகிஸ்தான், இந்தியா மற்றும் சீனா போன்ற பல முக்கிய நாடுகளின் பிரதான உணவு வகையாக கருதப்படுகின்ற பாகற்காய் பிரதானமாக 03 வகைப்படும்.

1. கடும் பச்சை நிற சாதாரண பாகற்காய் “கறுப்பு பாகற்காய்”
2. நீளமான மெல்லிய பாகற்காய் “நீள பாகற்காய்”
3. கட்டையான, தடித்த பாகற்காய் “கட்டை பாகற்காய்”

கிராமப்புற மக்கள் மட்டுமல்லாது நகர்ப்புற மக்களும் மிகச் சிறந்த நோய் நிவாரண, போசணை அடங்கிய உணவு வகையாக பாகற்காயை கருதுகின்றனர். இது தேசிய ஆயுர்வேத வைத்தியத் துறையில் மிகப் பிரதான இடத்தை பிடித்துள்ளது.

பல்வேறுபட்ட விசித்திரமான நோய்களை குணப்படுத்த பாகற்காயினால் ஆன மருந்து வகைகளை ஆயுர்வேத வைத்தியத்துறை பயன் படுத்துவதும் குறிப்பிடத் தக்கது.

பாகற்காய் மூலம் மருந்து வகைகளை வீட்டினுள்ளே உருவாக்கும் முறையினை ராஜகிரிய ஆயுர் வேத கல்வி நிலையத்தின் பிரதான விரிவுரையாளர் எஸ்.கே.எம்.கே. ஹெரபத்தெனிய தெளிவுபடுத்தினார்.

பாகற்காய் என்பது உடம்பில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும் ஓர் பெறுமதிமிக்க உணவு வகையாகும். உடல் பலத்தை அதிகரிக்கும் வல்லமை கூட பாகற்காய்க்கு உண்டு. எனினும் இந்த பெறுமதி மிக்க உணவில் அடங்கியுள்ள மருத்துவ குணம் தொடர்பில் பெரும்பாலானோர் அறிந்ததில்லை.

ஆயுர்வேத புத்தகங்களில் கரவில எனும் பாகற்காய் காரவில, கரவீபத்ர, பீத புஷ்ப எனும் பெயர்களில் இனங் காணப்படுகிறது. ஆயுர்வேதத்தின் அடிப்படையில் பாகற்காய் கோபாதகீ எனும் வர்க்கத்தினுள் அடங்கும் மூலிகையாகும். Momordica charahtia எனும் விஞ்ஞானப்பெயர் கொண்டு அழைக்கப்படும் பாகற்காய் cucurbitacqacee எனும் வர்க்கத்தினுள் அடங்கும். நீள பாகற்காய், கட்டை பாகற்காய், கறுப்பு பாகற்காய் என சாதாரணமாக அழைக்கப்படும் பாகற்காய் ஆயுர் வேதத்திற்கு அமைய வேறு சில பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

1. இளம் வெள்ளை நிறத்திலான பாகற்காய் (ஹெலகரவிய)
2. சிறிய காய்கள் அடங்கிய பாகற்காய்-(படுகரவில)
3. சற்று கடும்பச்சை நிற பாகற்காய் (துபகரவில)

இவற்றில் மருத்துவ குணம் நிறைந்த பாகற்காய் வர்க்கமாக சிறிய காய்கள் அடங்கிய பாகற்காய் கருதப்படுகிறது. பொதுவாக அனைத்து பாகற்காய்களும் போசணைமிக்கதும் மருத்துவ குணமுடையதுமாகும். சராசரியான மருந்து வகை எனும் ரீதியில் சிறிய காய்கள் அடங்கிய (படுகரவில) பாகற்காய் இனம் முக்கியத்துவம் பெறுகிறது.

காசநோயாளர்களின் நோயினை உடனடியாக குணப்படுத்துவதற்கும், உடம்பினுள் வித்தியாசமான விசத்தன்மையினை குணப்படுத்து வதற்கும், சக்கரை வியாதி, உயர் குருதி அமுக்கம் போன்ற பல்வேறுபட்ட நோய்களை குணப்படுத்துவதற்கும் பாகற்காய் சிறந்த நோய் நிவாரணி என ஹெரபத்தெனிய குறிப்பிட்டார்.

தேசிய ஆயுர்வேத வைத்திய முறைக்கு அமைய பாகற்காய், இலை, காம்பு. வேர் போன்றவற்றின் மூலமும் மருந்து வகைகளை உருவாக்கிக் கொள்ள முடியும். மேலும் இவ்வுயரிய மருத்துவ குணமிக்க பாகற்காயின் மூலம் தயாரிக்கப்படும் மருந்து வகைகளை வீட்டினுள்ளேயே தயாரிக்க முடியும் என சிரேஷ்ட விரிவுரையாளர் குறிப்பிட்டார்.

பாகற்காய் என்பது ஒரு நோயிற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட மருந்து வகை அல்ல. சக்கரை வியாதி, காச நோய், உடம்பின் அடிப்பாகத்திலிருந்தே விஷத்தை உரிஞ்சுதல், புற்று நோயினை சுகப்படுத்தல், நாடி, நாளங்கள் தொடர்பிலான நோய்களை குணப்படுத்தல் போன்ற பல்வேறு வகை நோய்களுக்கான சிறந்த நிவாரணமாக திகழ்வது பாகற்காயே.

பாகற்காயின் மூலம் மருந்து வகைகளை தயாரித்துக் கொள்ளல், அதனை பயன்படுத்தல் என்பவற்றை தெளிவுபடுத்துவதற்கு முன்னர் ஓர் முக்கிய விடயத்தை ஞாபக மூட்ட வேண்டி இருக்கிறது. இரவில் பாகற்காய் சம்பந்தப்பட்ட சம்பல், கறிவகை, பாகற்காய் மருந்துவகை போன்றவற்றை பயன்படுத்த வேண்டாம். அதற்கு காரணம் பாகற்காய் என்பது விஷத்தை அழிக்கும் மருந்து வகையாகும். இரவினில் ஒருவரின் உடம்பில் பாம்பு தீண்டி, விசம் உடம்பினுள் ஏறினால் அதனை அகற்ற அடுத்த நாள் காலையில் எவ்வளவு மருந்து வகைகளை பாவித்த போதும் இரவில் உட்கொண்ட பாகற்காயின் விளைவால் சாதகமான விளைவை எம்மால் உணர முடியாது. காரணம் விஷம் உறைந்திருக்கும். ஆகவே இரவு நேரத்தில் பாகற்காயினை உட்கொள்வதிலிருந்து விலகி நிற்பது மேல்.

பாகற்காயினுள் அடங்கியுள்ள விசேடமான இரசாயன குணத்தினால் பாம்பு விஷமும் அழிந்து போகும். எனினும் பாம்பு விஷத்தை அழிக்க பயன்படுத்தப்படும் மருந்துகளின் விஷமும் இறந்து விடுவதாலேயே இரவு நேரத்தில் பாகற்காய் உட்கொள்வதை தவிர்ந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப் படுகிறீர்கள்.

ஆயுர்வேதத்தில் சில விஷ திரவங்களை பாவித்து (இரசாயன மருந்து வகைகள்) தயாரிக்கப்படும் மருந்து வகைகளை பாவிக்கும் போதும் பாகற்காய் சாப்பிடுவது உடலுக்கு கேடு. நான் அவ்வாறு தெரிவித்தது 02 சந்தர்ப்பங்களை தவிர மற்றைய சந்தர்ப்பங்களுக்கு பொருந்தும். பாகற்காயினை உணவாகவோ மருந்தாகவோ பயன்படுத்துவது பொருத்தம்.

சக்கரை வியாதியினால் அவதியுறும் நோயாளிகளின் சீனித்தன்மையினை குறைப்பதற்கான சிறந்த மருந்து வகையே பாகற் காயாகும். பாகற்காயில் காணப்படும் charantin எனும் இரசாயன தன்மையினால் இரத்தத்தில் இருக்கும் சீனியின் அளவினை குறைத்துக் கொள்ள முடியும் என ஆய்வுகள் நிரூபித்துள்ளன. நீங்கள் சக்கரை வியாதியினால் பாதிக்கப்பட்ட ஒருவர் எனின் அன்றாடம் காலையில் பாகற்காய் இலை அல்லது காய் சாறு ஒரு மேசைக்கரண்டியினை அரை கப் தண்ணீரினுள் கலந்து வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். தினந்தோறும் அவ்வாறு குடித்து வருவதன் மூலம் charatin எனும் இரசாயன பதார்த்தம் உடம்பினுள் சுரக்கப்படுகிறது. இதன் மூலம் உடம்பினுள் இன்சுலினின் செயற்பாடு சீராக்கப்படும். சீனியின் அளவை கட்டுப்படுத்துவதன் மூலம் சக்கரை வியாதி பூரணமாக குணமடையும் வாய்ப்பும் இதன் மூலம் ஏற்படுகிறது. தினந்தோறும் பாகற்காய் இலை, காயினால் ஆன சாறு ஒரு மேசைக் கரண்டி பயன்படுத்தக் காரணம் மேலதிகமாக பயன்படுத்துவதன் மூலம் குறித்த நபருக்கு வாந்திபேதி ஏற்பட வாய்ப்புண்டு. அப்படி ஏதும் பிரச்சினை இன்றேல் போதுமான அளவு அதனை பாவித்துக் கொள்ளலாம்.

சக்கரை வியாதியுடைய நோயாளர்கள் மட்டுமல்ல சக்கரை வியாதி வருவதற்கான அறிகுறி கொண்டவர்கள் கூட இதனைப் பருகுவதன் மூலம் அதனை கட்டுப்படுத்த முடியும்.

சக்கரை வியாதியினால் கடுமையாக பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு பாகற்காயின் மூலம் தயாரிக்கப்படும் மேலுமொரு மருந்து வகையினை கற்றுத் தருகிறேன். பாகற்காய் சாறு 02 மேசைக்கரண்டி, நெல்லிக்கனி சாறு 02 மேசைக் கரண்டி, மஞ்சள் தூள் சிறிதளவு ஆகியவற்றை கலந்து தினந்தோறும் காலையில் குடிக்கவும். சக்கரை வியாதியுடைய நோயாளர்களுக்கு அதுவும் மிகச் சக்தி வாய்ந்தது.

பாகற்காயில் விட்டமின் A,B,C, கல்சியம், பொசுபரசு போன்ற போசணை கூறுகளுடன் எண்ணெய் தன்மையும் காணப்படுகிறது. எனவே பாகற்காயில் அதிகமான போசணை கூறுகள் காணப்படுவதால் உடம்பினுள் தேங்கும் தேவையற்ற அம்சங்களை வெளியேற்றும் சக்தி பாகற் காய்க்கு உண்டு. எனவே புற்று நோயை குணப்படுத்தும் மருத்துவ குணம் பாகற்காய்க்கு நிறையவே காணப்படுகிறது என சிரேஷ்ட விரிவுரையாளர் தெரிவித்தார்.

இன்று உலகம் மிக வேகமாக சென்று கொண்டு இருப்பதால் மக்களும் அதன் பால் சென்று கொண்டிருக்கின்றனர். இதனால் போசணை மிக்க உணவுப் பொருட்களுக்கு பதிலாக fast food முறைக்கு மாறி விட்டனர். அதன் விளைவே இன்று புற்று நோயின் அபாயம் அதிகரித்துள்ளது. இயற்கையான உணவு வகைகளை உணவு வேளைகளில் சேர்த்து கொள்ளாமையினால் ஏற்படும் புற்று நோயிலிருந்து விலகி இருக்கவும், புற்று நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு உரிய மருத்துவ உபகாரத்தை பெற்றுக் கொடுக்கவும் பாகற்காய் உதவும் என்பது பரிசோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டது. விசேடமாக லியுக்கேமியா போன்ற நெருக்கமான புற்று நோய்களை குணப்படுத்துவதற்கும் பாகற்காய் மூலம் முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறு பிள்ளைகளின் தலைகளில் ஏற்படும் பொடுகு போன்ற நோய்களுக்கும், பூச்சுக்கடிக்கும் பாகற்காய் சிறந்த மருந்தாகும். இவ்வாறு சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் சிறந்த நோய் நிவாரணியாக தொழிற்படும் பாகற்காயினை பெறுமதி மிக்க தங்கம் என ஆயுர் வேதத்தில் ஓர் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாகற்காயினை முறையாக பயன்படுத்தி வந்தால் வாழ்க்கையினை பெறுமதி மிக்கதாக மாற்றி விடும் என்பதே தங்கம் என்பதன் அர்த்தம்.

அன்றாட உணவு வேளைகளில் ஏதாவது ஒரு முறையில் பாகற்காயை சேர்த்துக் கொள்வதன் மூலம் எண்ணற்ற பயன்களை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

பாகற்காய் இலைகளின் பட்டைகளை காய்த்து தூளாக்கி கொள்வதன் மூலம் அதனை தேயிலை தூளுக்குப் பதிலாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம் என சிரேஷ்ட விரிவுரையாளர் மேலும் தெரிவித்தார். ■

உங்கள் அன்றாட உணவு வேளைகளில் ஒரு நேரத்தில் பாகற்காய் சம்பல் அல்லது பாகற்காய் கறியொன்றையும் சேர்த்துக் கொள்வதே இவையனைத்துக்கும் சிறந்த நோய் நிவாரணியாக அமையும்.

ஆயுர் வேதத்தில் காணப்படும் கசப்புச்சுவை மூலம் இதயம் தொடர்பில் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்த முடியும். அக்கசப்பு சுவை ஔடதங்களில் பாகற்காய் இடம் பிடிக்கிறது. ஏக காலத்தில் போதைப் பொருள் பாவனையால் இதயம் பாதிப்புக்குள்ளான எண்ணிலடங்கா நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். போதைப்பொருள் பாவனையினாலோ வேறு ஏதும் காரணங்களினாலோ இருதயம் தொடர்பில் நோய் உண்டானவர்கள் தினந்தோறும் காலையில் பாகற்காய் இலைச்சாறு 02 மேசைக்கரண்டி குடித்து வரும் போது பிரதிபலன் விரைவில் கிடைக்கும். எனினும் இதய நோயை குணப்படுத்த பாகற்காய் சாறு குடித்துக் கொண்டு மறுபுறம் மதுபானம் அருந்திக் கொண்டு இருப்பதால் எவ்வித பயனுமில்லை.

காச நோய், அரிப்பு போன்ற தோல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் பாகற்காய் சிறந்த நோய் நிவாரணியாகும். அது போன்றே கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பாகற்காய் போசணைமிக்க உணவுப் பொருளாகும். பாகற்காயில் காணப்படும் எண்ணெய் தன்மையினால் கர்ப்பிணி தாய் மார்களுக்கு ஏற்படும் நோயை கட்டுப்படுத்த வாய்ப்பாக இருக்கும். பால் சுரக்கவும் பாகற்காய் சிறந்த மருந்தாகும். தினந்தோறும் பாகற்காய் சாற்றை குடித்து வருவதன் மூலம் மலச்சிக்கலும் அற்றுப் போகும்.



## இணையத்தளம் அங்குரார்ப்பணம்!

உலக புற்று நோய் தினம் பெப்ரவரி 04ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. இவ்வருடத்திற்கான தொனிப்பொருள், "மாயத்திரையை அகற்றி உண்மையைப் பாருங்கள்" என்பதாகும்.

இதற்கமைவாக இலங்கை மக்களுக்கு புற்றுநோய் தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன www.nccp.gov.lk என்னும் இணையதளத்தை கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இதனுடன் இணைந்ததாக 0715320320 என்ற அவசர தொலைபேசி இலக்கமும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. குறித்த தொலைபேசி இலக்கத்தினூடாக காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையில் எமது உள்ளூர் வைத்தியர் களிடமிருந்து புற்றுநோய்க்கான அறிகுறிகள், சிகிச்சை முறை என்பன குறித்து பொதுமக்கள் தமது சந்தேகங்களை தீர்த்துக்கொள்ள முடியுமெனவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இதன் போது கூறினார்.

இந்நிகழ்வு சுகாதார கல்விப் பணிமனையில் நடைபெற்றது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை திறப்பு

யாழ். தெல்லிப்பழையில் 300 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள Trail புற்றுநோய் வைத்தியசாலைக்கான கட்டிடங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

தமது குடும்பத்தில் தமது சகோதரர் புற்றுநோயால் மரணித்ததன் ஞாபகார்த்தமாகவும் மக்கள் எதிர்ப்பின் காரணமாகவும் இரு இளைஞர்கள் இணைந்து எடுத்த முயற்சியின் விளைவே தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையாகும்.

இதுவரை காலமும் தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலை யாழ். போதனா வைத்திய சாலையில் ஒரு பிரிவாகவே மிகக் குறைந்த வசதிகளுடன் இயங்கியது.

நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் இங்கு இருக்கவில்லை. தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலையின் வாட்டுத் தொகுதி உட்பட மேலும் பல பிரிவுகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு ஜனாதிபதியினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

120 கட்டில்களைக் கொண்ட சகல வசதிகளும் கொண்ட வாட் தொகுதி, சிகிச்சை பிரிவு, வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கான பிரிவு, கேட்போர் கூடம் உட்பட பல பிரிவுகள் இதில் அடங்குகின்றன.

300 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த கட்டடத் தொகுதியை ஜனாதிபதி பார்வையிட்டார். அப்பிரிவுகளின் செயற்பாடுகள் தொடர்பாக குறித்த அதிகாரிகள் ஜனாதிபதிக்கு விளக்கமளித்தனர்.

இதே வேளை மேற்படி புற்றுநோய் வைத்தியசாலைக்கான அதியுயர் கதிர்வீச்சுப் பிரிவு அரசாங்கத்தின் நிதியில் 300 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லும் ஜனாதிபதியினால் நட்டு வைக்கப்பட்டது.

இந்த உயர் கதிர்வீச்சுப் பிரிவு நிர்மாணிக்கப்பட்டதும் புற்று நோய்களுக்கான சகல சிகிச்சைகளும் தெல்லிப்பழையிலேயே மேற்கொள்ளக்கூடிய வசதிகள் புற்று நோயாளர் களுக்குக் கிடைக்கும்.

குறிப்பாக இதுவரை மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு அலைந்து திரிந்து பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்ட வடக்கு மக்கள் அதே சிகிச்சைகளை தெல்லிப்பழையிலேயே மேற்கொள்ள முடியும். அதற்கான சகல வசதிகளும் புதிய கதிர்வீச்சுப் பிரிவில் உள்ளடக்கப்படவுள்ளன.

“பாதை” (Trail) என்ற அமைப்பு சுமார் 27 நாட்கள் தெற்கிலிருந்து பாதயாத்திரையொன்றை வடக்கிற்கு மேற்கொண்டது. இதன் மூலமே நிதி திரட்டப்பட்டு தெல்லிப்பழை (Trail) வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடல் எடையை குறைப்பது எப்படி?

வைத்தியர் - பாலித சமன் ஜயகொடி

**உடல் எடையை அதிகரிப்பது இலகு**

ஒருவர் தனது உணவின் மூலம் மேலதிகமாக 9,000 கிலோ கலோரி சக்தியை தனது உடம்புக்கு வழங்குவதனூடாக உடலின் எடை 1 கிலோ கிராமினால் அதிகரிக்கின்றது. இவ்வாறு அதிகரித்துக் கொள்வது கடினமான காரியமன்று. எந்தவொரு எண்ணெய் தன்மை பொருந்திய உணவு வகைகள் அல்லது கொழுப்பு அடங்கிய படர், மாஜரின் போன்ற உணவுப் பொருட்கள் 1 கிலோ கிராம் அளவில் உணவில் சேர்த்துக் கொள்ளும் போது தமது எடையை அதிகரித்துக் கொள்ளலாம். அதைவிட பன்றி இறைச்சி போன்ற எண்ணெய் தன்மை பொருந்திய மாமிச உணவு வகைகளை உட்கொள்வதன் மூலமும் தமது எடையை அதிகரித்துக் கொள்ளலாம்.

ஒருவருக்கு தேவை ஏற்படின் ஒரு சில நிமிடங்களில் உடல் எடையை 1 கிலோ கிராமினால் அதிகரிக்க தேவையான உணவு வகைகளை உடலுக்கு பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு மிக இலகுவான முறையில் அதிகரிக்க முடிந்த எடையை குறைத்துக் கொள்வது என்பது கல்லில் நார் உரிப்பதை போன்றது. ஏனெனில் மிகவும் கடின உழைப்பில் குறைந்தது 03 நாட்கள் ஈடுபட வேண்டும். அப்படி இல்லாவிட்டால் உடலை தளர்த்தும் உடற்பயிற்சிகள் 30ஐ சரிவர செய்ய வேண்டும்.

**உணவுக் கட்டுப்பாடே சிறந்தது**

எவ்வாறான எடையை குறைக்கும் முயற்சியில் ஈடுபடும் நபரும் முதலில் தனது வாயையும், வயிற்றையும் பாதுகாத்துக் கொள்வது எனும் உணவுக் கட்டுப்பாட்டினை சரிவர நிறைவேற்ற வேண்டும். அதே போன்று எடையை அதிகரிக்கத் தக்க உணவு வகைகளை உட் கொள்வதன் மூலம் தமது ஆரோக்கிய வாழ்விற்கு அச்சுறுத்தலை எதிர் நோக்க வேண்டி இருக்கும்.

நீண்ட காலமாக உணவின் மூலம் பெறப்படும் அத்தியாவசியமற்ற சக்தி உடம்பில் கொழுப்பாக மாறி, உடல் எடையை குறைக்க உணவின் மூலம் சேமிக்கப்படும் அவசியமற்ற சக்தியை பெற்றுக் கொள்வதை நிறுத்த வேண்டும். அதே போன்று எடையை குறைத்துக் கொள்ள, ஏற்கனவே தேவையற்ற சக்தி உடம்பில் சேமிக்கப்பட்டு இருப்பதால் இதன் பிறகாவது அவ்வாறான உணவுகளை உட்கொள்வது தொடர்பில் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். அவ்வாறு கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் உடம்புக்குள் புகும் அவசிமற்ற சக்தி கட்டுப்படுத்தப் படுவதால் உடம்பினுள் ஏற்கனவே சேமிக்கப் பட்டிருக்கும் கொழுப்பினை உடைத்து தனது தேவைகளை உடம்பு பூர்த்தி செய்து கொள்ளும்.

எமது உடம்புக்கு சக்தி உணவின் மூலமே கிடைக்கப் பெறுவதால் அவ்வாறு சக்தியை முடிந்தளவு கட்டுப்படுத்த உணவு கட்டுப்பாட்டினை கடைப்பிடிப்பது சிறந்தது. சாப்பிடாமலேயே இருப்பது உணவுக் கட்டுப்பாடு அல்ல

இவ்வாறான கட்டுரைகளை அதிகமானோர் வாசிப்பதிலிருந்து விலகி நடக்கின்றனர். காரணம் "அந்த கட்டுரைகள் எம்மை சாப்பிடாமல் இருக்கச் சொல்கிறது. எமக்கென்றால் அப்படி இருக்க முடியாது" எனும் பிழையான எண்ணமே. எனினும் நீங்கள் அவ்வாறு நினைக்காதீர்கள். நாம் ஒரு போதும் உங்களுக்கு பட்டினியில் இருக்கச் சொல்லவில்லை. உங்களுக்கு வயிற்றை நிரப்பிக் கொள்ள முடியும்.

இரவில் சாப்பிட வேண்டாம் என நாம் ஒரு போதும் கூறவில்லை. இது வரை காலமும் இரவில் சாப்பிடாதிருக்கும் நபர்களுக்கும் உடனே இரவில் சாப்பிட ஆரம்பிக்குமாறு நாம் உத்தரவிடுகிறோம். அதே போன்றே பல மணி நேரம் பசியில் வாடுமாறும் நாம் கூறவில்லை.

நாம் உணவுக் கட்டுப்பாட்டினை மேற் கொள்வதன் மூலம் உடனடியான பெறுபேற்றினை எதிர் பார்க்க முடியாது. எடை கூடிய நபர்களின் உடம்பில் அதிகமான கொழுப்பு சேமிக்கப் பட்டிருப்பதே அதற்கான காரணமாகும். இவ்வாறான நிலையில் உடம்பில் தங்கி இருக்கும் கொழுப்பினை குறைக்க முடிந்தளவு உணவு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். அதற்காக வேண்டி உடற்பயிற்சி, பார வேலைகள் போன்றவற்றை முடிந்தளவு செய்ய வேண்டும்.

அந்த செயற்பாடுகள் அனைத்தையும் நாம் "உடற்பயிற்சி" எனும் பெயரில் அழைப்போம்.
உடல் எடையை குறைக்க சில டிப்ஸ்

1. நோக்கத்தை நிர்ணயித்தலும் அதனை அடைய முயற்சித்தலும்
2. உணவுக் கட்டுப்பாடு
3. உடற்பயிற்சி
4. மனதை சந்தோசமாக வைத்துக் கொள்ளல் ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பாதுகாப்புத் துறைக்கு பாகிஸ்தானிடமிருந்து 100 கார்கள்











**பா**கிஸ்தானில் இந்துஸ் மோட்டர்ஸ் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட 100 டொயடா கொரலா (Altis) கார்களை இலங்கை பொலிஸ் மற்றும் இராணுவத்தினரிடம் கையளிக்கும் வைபவம் இலங்கை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்றது. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கரிம் குரை, இலங்கையின் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க, இலங்கை பொலிஸ் படை தளபதி என். கே. இலங்கக்கோன் ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் இந்துஸ் மோட்டர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. அலி அஸ்கார் ஜமாலி மற்றும் இஸ்மாயில் அகமட் சேதி, பாதுகாப்பு ஆலோசகர் கர்னல் ஷஹீரியர் பர்வாஸ் பூட், ஊடக இணைப்பாளர் தாவுட் எதிஷாம் போன்றோரும் கலந்துகொண்டனர். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியாவின் ஆச்சரியமாகும் இலங்கையின் சுற்றுலாத்துறை

இலங்கையை உலகின் முன்மாதிரி நாடாக உருவாக்கியதன் மூலம் இலங்கை உலகின் சுற்றுலாத்துறையின் தங்குமிடமாக ஜனாதிபதி அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவே மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் இலக்காகும்.


2016 ஆம் ஆண்டளவில் எம் நாட்டுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை 25 இலட்சமாக அதிகரிக்கும் திட்டம் இன்று வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சுற்றுலா பயணிகளின் வருகையினை கருத்திற்கொண்டு 22,500 ஹோட்டல் அறைகள் அமைக்கும் பணி நடைபெறுகிறது. இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றும் மஹிந்த அரசாங்கத்தின் திட்டங்களில் சுற்றுலாத்துறை முக்கிய பங்கு வகிக்கின்றது. 5 வருட திட்டத்தினை அடிப்படையாக கொண்டு சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகிறது.

சுற்றுலாத்துறையில் முதலீடுகளை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஒன்று சேர்த்து அவர்களின் முதலீடு தொடர்பில் புதிய திட்டங்களை முன்னெடுக்கும் நடவடிக்கை 05 வருட திட்டமிடலின் மிக முக்கியமான அம்சமாகும்.

இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கை தனக்கே உரிய பல முக்கிய சிறப்பம்சங்களை கொண்டுள்ளது. இயற்கை அரண்கள், உயிரின பல்வகைமை, கலாசாரம், வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்கள், கைத்தொழில் பொருட்கள், அதிசயிக்கதக்க கடற்கரைகள், அழகிய சுற்றுப்புறச் சூழல் மற்றும் நட்புறவுமிக்க மக்கள் என சகல அம்சங்களையும் கொண்டுள்ளது. இவற்றினை அடிப்படையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்தே சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்யப்படுகிறது.

மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளதை போல "சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்காக துரித அபிவிருத்தி திட்டமொன்றை அறிமுகம் செய்கிறேன் அதன் கீழ் 2016 ஆம் ஆண்டளவில் இலங்கை வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை 25 இலட்சமாக அதிகரிப்பதற்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் பிற செயற்பாடுகள் முன்னெடுப்போம்." எனும்கூற்று இன்று யதார்த்தமாக்கப்பட்டு வருகிறது.

### 5 இலட்சம் தொழில் வாய்ப்புக்கள்

இலங்கைக்கே உரித்தான கலாசார அம்சங்களுக்கு ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் பெரும் வரவேற்பு உள்ளது. எம்மிடம் இருக்கும் இப்பெறுமதி வாய்ந்த அம்சமானது சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிகின்றது எனலாம். இவ் ஐந்தாண்டு செயற்திட்டத்தில் 3000 டொலர் வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்குமென சுற்றுலாத்துறை அமைச்சு எதிர்பார்க்கின்றது. இன்று வரை அந்த இலக்கில் வெற்றி கண்டுள்ளது. 2010 ஆண்டு US $500 ஆக காணப்பட்ட வெளிநாட்டு பரிமாறல் 2016ம் ஆண்டளவில் 250 அமெரிக்க டொலராக அபிவிருத்தி அடையச்செய்வதும் ஓர் திட்டமாகும். சுற்றுலாத்துறை வியாபாரத்தின் மூலம் பெறப்படும் பொருளாதார வரப்பிரசாதங்களை முழு சமூகத்திற்கும் பகிர்ந்தளிப்பதற்கான வேலைத் திட்டங்களும் காணப்படுகின்றன. இது சர்வதேச வர்த்தகத்தை மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் இலங்கைக்கு அதிக நன்மைகளையும் வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொள்ளும் செயற்திட்டத்திற்கு புறம்பானதாகும்.

2010 ஆம் ஆண்டளவில் 25000 ஆக இருந்த பொருளாதார தொடர்பான தொழில் வாய்ப்புக்களை 05 இலட்சமாக உருவாக்குவது அதன் மற்றுமொரு திட்டமாகும்.

30 வருட கொடிய யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து 2010 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தரும் உள்ளாசப்பயணிகளின் எண்ணிக்கை 46% ஆக உயர்ந்தது. இந்நாட்டுக்கு வருகை தந்த உள்ளாசப்பயணிகளின் எண்ணிக்கை 6,50,000 க்கும் அதிகமாகும். வரலாற்றில் சுற்றுலாத்துறையின் மைல்கல்லாக விளங்கிய 2010 ஆண்டு இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தியில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். இலங்கையில் காணப்பட்ட சமாதான சூழல் மற்றும் சகவாழ்வு என்பவற்றை முன்னுதாரணமாக கொண்டமையினாலேயே இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

எமது நாட்டின் அமைவிடம், உயிரின பல்வகைமை, மனிதாபிமான உள்ளங்கள், சமாதான சூழல், சாதகமான பொருளாதார நிலை, உறுதியான அரசியல் எண்ணப்பாடுகள் என்பன வலய நாடுகளில் இலங்கை முன்னிலை வகிக்க காரணமாகும். சமூக மாற்றங்கள் என்பவற்றின் உதவியோடு 2010 ஆம் ஆண்டு இலங்கையின் தனிநபர் வருமானம் 2400 அமெரிக்க டொலராக காணப்பட்டதுடன், பொருளாதார அபிவிருத்தி வேகம் 8% ஆக உயர்ந்தமையும் இவ்வெற்றிக்கு காரணமாகும்.

சுற்றுலாத்துறைக்கு அவசியமான சுற்றுப்புற சூழலை உருவாக்கும் போது மற்றும் இத்துறையில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு உதவும் நோக்கில் உருவாக்கப்பட்ட கொள்கையின் அடிப்படையில் விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பது போன்றவை இதன் சில முன்னெடுப்புக்களாகும். உள்ளாச பயணிகள் நாட்டை சுற்றி வலம் வர விரையமாகும் நேரத்தை குறைக்க இலங்கை சுற்றுலாத்துறைச்சபை மூலம் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடல் வழி விமானங்கள், இலகு தன்மை பொருந்திய சாதாரண விமானங்கள் போன்ற செயற்திட்டங்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான குளங்களும், ஆறுகளும், நீர் நிலைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காணப்படுவதால் நீர் மேல் தரை இறக்க முடிந்த கடல் விமானங்களை பயன்படுத்துவது நேரத்தை சேமிக்க சிறந்த வழியாகும். குறிப்பிட்ட ஒரு சில இடங்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு அதிக கிராக்கி நிலவி வருகிறது. அது போலவே அதிவேக கடுகதி புகையிரதங்களின் பாவனையும் நேரம் சேமிப்பதற்கு பெரிதும் உதவுவதாக உள்ளது.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில் இலங்கை சுற்றுலாத்துறை சபை ஏனைய துறை சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உதவியையும் பெற்றே தொழில்படுகிறது. 2016 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படும் 2.5 மில்லியன் உள்ளாசப் பயணிகளுக்கு அவசியம் என கருதும் ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கை 45,000 ஆகும். 2010 ஆம் ஆண்டிறுதியில் சுற்றுலாச்சபை அனுமதித்தது வெறும் 22,735 க்கே ஆகும். இலக்கை அடைந்து கொள்ளும் நோக்கில் சுற்றுலாச்சபையுடன் இணைந்து ஏனைய முதலீட்டு அமைப்புகளின் உதவியுடன் பெரும்பாலான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இந்நவீன யுகத்தில் உலகத்தின் பிரசித்தமான சேவை நோக்கம் கொண்ட பிரிவு சுற்றுலாத் துறையாகும். மஹிந்த சிந்தனை அடிப்படையில் இலங்கையும் அதனுள் உள்வாங்கப் பட்டு வருகிறது. அவ்வெற்றியின் அடிப்படையில் 2010 ம் ஆண்டில் சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 1045 அமெரிக்க டொலர்களாகும்.

உள்ளாச பயணிகளை கவரும் நோக்கில் தம் சக்தியின் அடிப்படையில் அரசு பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. சிறு வியாபாரங்கள், பாரிய வியாபாரங்கள், ஓய்விடங்கள், விலங்குகளின் கண்காட்சிகள் என்பன உயரிய வருமானத்தை அடிப்படையாக வைத்து முன்னெடுக்கப்படுகின்றன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ ஆகியோரின் தெளிவான வழிகாட்டலின் பெயரில் இத்திட்டங்கள் வெற்றிகரமான முறையில் முன்னெடுக்கப்படுகிறது.


இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி பணியகம் உலகத்தில் 25 நகரங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஆரம்பித்துள்ள சுற்றுலாத்துறை முன்னேற்ற வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் இவ்வாண்டுக்கான இலக்கை அடைந்துள்ளது. சீனா, ரஷ்யா, கொரியா, யப்பான், இந்தியா போன்ற 25 அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சந்தைகளில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இலங்கையை ஆசியாவின் விசேடமான சுற்றுலாத்துறையின் ஓய்விடமாக உருவாக்குவது மற்றும் வியாபார வாய்ப்புகள், முதலீட்டு வாய்ப்புக்களை அதிகரித்து கொள்ளும் நோக்கில் இந்தியாவில் பெங்களூரில் நடைபெற்ற நிகழ்வு (GET Sri Lankaned) இலங்கையின் தோட்டம் எனும் தலைப்பில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சுற்றுலாத்துறை, முதலீடு மற்றும் வியாபாரத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச மற்றும் தனியார் துறை சார்ந்த 60 இலங்கை நிறுவனங்கள் கலந்து கொண்டன.


பங்களூர் தாப் ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஊடக சந்திப்பு, புதிய அலங்கார வடிவ காட்சி (Fashion Show), கண்காட்சிகள் உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடைக்கிடையில் இடம்பெற்றது. அத்துடன் இருநாட்டு வியாபார முதலீட்டாளர்களும் சந்திப்புக்களை மேற்கொண்டனர். அத்துடன் இந்திய வாடிக்கையாளர்களை நோக்காக கொண்டு நடைபெற்ற (Mall Activation) நிகழ்வில் இலங்கையின் சுதேச உணவுப்பண்டங்களை சுவைக்கும் வாய்ப்பை இந்தியர்கள் பெற்றுக்கொண்டனர். அத்துடன் அந்நிகழ்வு இலங்கையின் பாரம்பரிய கலாசார, சம்பிரதாயங்களை கொண்டிருந்தது.

**விஷேட பயண முடிவிடம்**

ஐ.நா சபையின் சர்வதேச சுற்றுலாத்துறை கூட்டமைப்பின் அடிப்படையில் 2011ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து வெளியில் சென்ற உள்ளாசப்பிரயாணிகளின் எண்ணிக்கை 15 மில்லியன் ஆகும். இது 2020 ஆம் ஆண்டில் 50 மில்லியனாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு 186,525 உள்ளாசப்பிரயாணிகள் வருகை தந்துள்ளனர். எண்ணிக்கையில் ஒரு நாட்டிலிருந்து வந்த அதிக உள்ளாசப்பிரயாணிகள் என்ற சாதனையை இது படைக்கிறது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



2016 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் 25 மில்லியன் உள்ளாசப் பிரயாணிகளின் வருகையுள் இந்தியாவிலிருந்து 04 மில்லியன் எதிர்பார்க்கப் படுகிறது. இலங்கை இந்தியாவிற்கு மிக அருகில் இருப்பதும், அழகிய கடற்கரைகள், உணவு வகைகள், வியாபாரங்கள், இயற்கை அழகு மற்றும் அனுபவத்தைப்பெற்றுக்கொள்ள இருக்கும் வாய்ப்புக்கள் என்பன இலங்கை சுற்றுலாத்துறையின் விசேட பயண முடிவிடமாக கருதப்பட காரணமாகும்.

இதனடிப்படையில் ஒரு வாரத்தில் இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் விமான சேவைகளின் எண்ணிக்கையை 127 ஆக உயர்த்தவும், இரு நாடுகளின் உறவினை மென்மேலும் அதிகரிக்க இலங்கை விமான சேவையை இந்தியாவின் 08 நகரங்களுக்கு வியாபிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மும்பாய், புதுடில்லி, ஹைத்தராபாத், அஹமதாபாத், கொச்சி போன்ற நகரங்களின் சுற்றுலா அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன. சீன உள்ளாச பிரயாணிகளை இலக்காக கொண்டு சீன தலைநகர் பீஜிங்கிலும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதுவும் மிக வெற்றியான முறையில் நிறைவடைந்தது.

சீன வேர்ல்ட் ஹோட்டலில் நடைபெற்ற “இலங்கை இரவு” எனும் நிகழ்வு சீனர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றது. 2016 ஆம் ஆண்டின் எதிர்பார்ப்பில் சீன உள்ளாச பிரயாணிகள் 275,000 பேர் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

வெளிநாட்டிற்கு சுற்றுலா செல்வதில் அதிக பிரயத்தனம் கொண்ட சீனர்களை அடையாளம் கண்டு முன்னெடுக்கப்பட்ட வியாபார நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமாக அமைந்தன. பீஜிங் சர்வதேச சுற்றுலாத்துறை அபிவிருத்தி, குவாங்கோ சர்வதேச வியாபார கண்காட்சி, சீன சர்வதேச சுற்றுலாத்துறை ஆகியன அபிவிருத்தி நடவடிக்கைகளில் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த வருடத்தின் ஆரம்ப 06 மாதங்களில் இலங்கைக்கு வருகை தந்த சீன உள்ளாசப் பயணிகளின் எண்ணிக்கை 16,582 ஆகும். எனினும் கடந்த வருட ஆரம்ப 06 மாதங்களில் இலங்கைக்கு வருகை தந்த சீன உள்ளாசப் பயணிகளின் எண்ணிக்கை 9622 ஆகும். இந்த புள்ளி விபரங்கள் சுற்றுலாத்துறையின் அதிவேக வளர்ச்சியை காட்டி நிற்கிறது.

சீன உள்ளாசப் பயணிகளின் வருகை வருடாந்தம் 72% வளர்ச்சியை காட்டுகின்றது. இந்தியா, சீனா மட்டுமல்லாமல் உலகத்தின் ஏனைய சில முக்கிய நாடுகளின் உள்ளாச பிரயாணிகளின் இலங்கை வருகையிலும் கூட அதீத வளர்ச்சி வேகம் காணப்படுகிறது. இதுவே மஹிந்த சிந்தனையின் வெற்றியாகும்.

சூழலியல் ஊடகவியலாளர்கள் இலங்கையை சர்வதேசத்தின் அழகிய தீவு என வர்ணிக்கின்றனர். “இந்து சமுத்திரத்தின் முத்து” என பெயர் பெற்றதும் இலங்கை தன்வசம் கொண்டுள்ள சுற்றுலாத்துறை சிறப்பம்சங்ளினாலே என்பதே உண்மை.

இலங்கை உலகின் முன்மாதிரி நாடாக உருப்பெறுவதன் மூலம் இதுவே சுற்றுலாத்துறையின் பயண முடிவிடமாகிறது.

நிகழ்கால இலங்கை ஆசியாவின் வியக்கத்தக்க நாடாக மாறும் நாள் வெகு தொலைவிலில்லை என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் 25 இலட்சம் சுற்றுலாப்பயணிகளின் வருகை எதிர்பார்க்கப் படுகிறது.

- 2008 ஆம் ஆண்டு 4 இலட்சத்து 38 ஆயிரத்து 475 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

  இவர்களில்,
  321, 079 பேர் பொழுது போக்குக்காக
  37, 261 பேர் வியாபார நோக்கத்திற்காக
  80, 135 பேர் ஏனைய நோக்கங்களுக்காக

- 2009 ஆம் ஆண்டு 4 இலட்சத்து 47 ஆயிரத்து 890 சுற்றுலாப்பயணிகள் இலங்கை வந்திருந்தனர்.

  இவர்களில்,
  358, 188 பேர் பொழுது போக்குக்காக
  38, 473 பேர் வியாபார நோக்கத்திற்காக
  51, 229 பேர் இதர நோக்கம்

- 2010 ஆம் ஆண்டு 6 இலட்சத்து 54 ஆயிரத்து 476 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்திருந்தனர்.

  இவர்களில்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



516, 538 பேர் பொழுது போக்குக்காக
83, 720 பேர் வியாபார நோக்கம்
54, 668 பேர் இதர நோக்கம்

- 2011 ஆம் ஆண்டு 8 இலட்சத்து 55 ஆயிரத்து 975 பயணிகள் இலங்கைக்கு வந்தனர்.
- 2012 ஆம் ஆண்டு 10 இலட்சத்து ஐயாயிரத்து 605 பயணிகள் இலங்கைக்கு வந்தனர்.
- 2013 ஆம் ஆண்டு
  January –97, 411 பேர்
  February –93, 232 பேர்
  March – 98, 155 பேர்
  October – 102, 805 பேர்

October வரை 2013 இல் – 904,015 பேர் வருகை தந்துள்ளனர்.

**வருமானம்**

2011 – 830 மில்லியன் டொலர்
(இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 44.2 சதவீத அதிகரிப்பு)

**செலவீடு**


சுற்றுலாப் பயணி ஒருவரினால் செலவிடப்பட்ட சராசரித்தொகை
2010 இரவு ஒன்றிற்கு 88 US டொலர்
2011 இரவு ஒன்றிற்கு 97 US டொலர்
2012 இரவு ஒன்றிற்கு 103 US டொலர் ■

தமிழில் : முத்துரான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# அலியா ரிஸோர்ட்

## சீகிரிய



தம்புள்ள சிகிரியா பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அலியா றியோர்ட் என்ற நான்கு நட்சத்திர ஹோட்டல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது.

140 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப் பட்டுள்ள இவ் அலியா ஹோட்டல் 96 சொகுசு அறைகளைக் கொண்டுள்ளன. சூழல் பாதிப்புக்கள் ஏற்படாதவாறு கூடாரங்கள் போன்ற சொகுசு அறைகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அழகிய ரம்மியமான முறையில் அமைக்கப்பட்டுள்ள அலியா ஹோட்டலில் இருந்து ஏழு கிலோ மீற்றர் தூரத்தில் வரலாற்று முக்கியத்து வமிக்க சிகிரியா கல் அமைந்துள்ள பிரதேசம் உள்ளது. அலியா ஹோட்டலில் விவசாய நூதன சாலை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

நாட்டின் அனைத்து மக்களும் நன்மை பெறக்கூடிய வகையில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக அமைந்துள்ளது. உலகில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தமது பொருளாதாரத்தை சுற்றுலாத்துறையைக் கொண்டு முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன.

அந்த வகையில் இலங்கையும் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக யுத்தம் முடிவடைந்த பின்னர் நாடு பல்வேறு வகையிலான பொருளாதார நன்மைகளை பெற்று வருகின்றது. அதன்படி சுற்றலாத்துறையும் முன்னேற்றமடைந்து வருகின்றது.

அந்த வகையில், இலங்கை வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான ஹோட்டல் அறைகளை வழங்குவது சில வருடங்களுக்கு முன்னர் சவாலாக இருந்தது. ஆனால், இன்று உள்நாட்டு வர்த்தகர்கள் முன் வந்து பல்வேறு மாவட்டங்களில் ஹோட்டல்களை நிர்மாணித்து வருகின்றனர். அந்த வகையில் சந்திரா விக்ரமசிங்க என்பவர் இந்த அலியா ஹோட்டலை நிர்மாணித்துள்ளார். அதே போன்று பாசிக்குடாவில் மாலு மாலு ஹோட்டலையும் ஆரம்பித்துள்ளார். விரைவில் அவர் கற்பிட்டிப் பகுதியில் ஹோட்டல் ஒன்றை அமைக்கவும் உள்ளார்.

20 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஹோட்டலின் ஊடாக நேரடியாக பிரதேசத்தைச் சேர்ந்த 200 பேருக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதாகவும் 500 பேருக்கு மறைமுகமான வகையில் தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் 2016 ஆம் ஆண்டில் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். கடந்த 2013 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 1,274,593 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

வரலாற்றில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வந்த வருடமாக 2013 ஆம் ஆண்டு காணப்படுகின்றது. இதன் மூலம் 2013 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 1.45 மில்லியன் டொலர் வருமானம் கிடைத்துள்ளது. மேலும் 2013 ஆம் ஆண்டில் இலங்கையில் 43 புதிய ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவிக்கின்றது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மீள் குடியேற்றத்தில் 90 வீதம் பூர்த்தி

யுத்தத்தின் பின்னரான மீள் குடியமர்வு நடவடிக்கை கடந்த 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் 90 வீதமான குடியமர்வு நிறைவு பெற்றுள்ளது என மாவட்ட திட்டமிடல் தகவலில் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 40 ஆயிரத்து 594 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 116 பேர் வரையில் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர் என அத்தகவலில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகளான இரணைத்தீவு, பரவிப் பாஞ்சான் ஆகிய இடங்களும் வெடிப் பொருள் ஆபத்தான நிலையில் காணப்படும் முகமாலையின் குறிப்பிட்ட சில பகுதிகளும் இதுவரை மக்கள் மீள் குடியமர்விற்கு அனுமதிக்கப்படாமல் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் திட்டமிடல் கிளையின் தகவல்களின் அடிப்படையில் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தின் 40,594 குடும்பங்களைக் சேர்ந்த 1 இலட்சத்து 31 ஆயிரத்து 116 பேர் மீள் குடியேறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் 22,522 குடும்பங்களைச் சேர்ந்த 70,363 பேரும், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 7,623 குடும்பங்களைச் சேர்ந்த 24,490 பேரும், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 6,912 குடும்பங்களைச் சேர்ந்த 24,355 பேரும், பளை பிரதேச செயலாளர் பிரிவில் 3,537 குடும்பங்களைச் சேர்ந்த 11,908 பேரும் இது வரையில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளதாக அப்புள்ளி விபரத் தகவலில் தெரிவிக்கப்படுகிறது. ■





## "98 சதவீத மீள்குடியேற்றங்கள் வெற்றிகரமாக பூர்த்தி"

– விநாயக மூர்த்தி முரளிதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



30 வருட கொடிய யுத்தத்தின் பின்னர் வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களிலும் 2 இலட்சத்து 24 ஆயிரத்து 432 பேர் குடியமர்த்தப் பட்டுள்ளனர். அதே போன்று 7,094 குடும்பங்களைச் சேர்ந்த 23,568 பேர் இன்னும் மீள் குடியேற்றப்பட உள்ளனர் என மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மீள் குடியேற்றம் தொடர்பான வேலைத் திட்டத்தில் 98 வீதமான மீள் குடியேற்றங் களை அரசாங்கமும் தமது அமைச்சும் வெற்றிகரமாக மேற் கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

**மீள்குடியேற்றம் தொடர்பில் சில முக்கிய தகவல்கள்**

இதுவரை வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங் களிலும் 224,432 குடும்பங்களைச் சேர்ந்த 757,795 பேர் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

**01.வட மாகாணம்**

151,445 குடும்பங்களைச் சேர்ந்த 500,757 பேர் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டம் - 31,188 குடும்பங்களைச் சேர்ந்த 92,052 பேர்

மன்னார் மாவட்டம்- 24,022 குடும்பங்களைச் சேர்ந்த 90,957 பேர்

வவுனியா மாவட்டம் - 15,981 குடும்பங்களைச் சேர்ந்த 54,540 பேர்

முல்லைத்தீவு மாவட்டம்- 39,660 குடும்பங்களைச் சேர்ந்த 127,092 பேர்

கிளிநொச்சி மாவட்டம் - 40,594 குடும்பங்களைச் சேர்ந்த 131,116 பேர்

**02.கிழக்கு மாகாணம்**

72,981 குடும்பங்களைச் சேர்ந்த 257,038 பேர் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அம்பாறை - 337 குடும்பங்களைச் சேர்ந்த 1,175 பேர்

மட்டக்களப்பு - 37,273 குடும்பங்களைச் சேர்ந்த 126,766 பேர்

திருமலை - 35,377 குடும்பங்களைச் சேர்ந்த 129,097 பேர்



- வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களிலும் மொத்தமாக 7,094 குடும்பங்களைச் சேர்ந்த 23,6568 பேர் இன்னும் மீள் குடியேற்றப்பட உள்ளனர்.
- 147,367 வீடுகள் யுத்த காலத்தில் முற்றாக அழிவடைந்துள்ளன. 39,794 வீடுகள் பகுதியளவில் சேதமடைந் துள்ளன. இவற்றில் 45,885 வீடுகள் இதுவரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதே வேளை 10,500 வீடுகள் திருத்தியமைக்கப் பட்டுள்ளன.
- 19,943 வீடுகள் தற்போது புதிதாக நிர்மாணிக்கப் பட்டு வருகின்றன.
- 14,168 வீடுகள் புதிதாக நிர்மாணிப்பதற்கும் 4,136 வீடுகளை திருத்தியமைப்பதற்கும் திட்டமிடப் பட்டுள்ளன. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## Eastern Development

மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு கடந்த சில மாதங்களாக உள்ளாசத்துறையில் முன்னேற்றம் கண்டு வருகிறது.

விடுமுறை காலத்தைக் கழிக்கவென மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்யும் உள்நாட்டு உல்லாச பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அமைதிச் சூழலும், சாதகமான போக்கு வரத்து வசதிகளும் ஏற்பட்டுள்ளதால் அதிகமான தென் பகுதி சுற்றுலா பயணிகள் இங்கு வருகை தருவதை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு நகரம் பல கோடி ரூபா செலவில் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளதால் அங்குள்ள மகாத்மா காந்தி பூங்கா, காந்தி சிலை, மட்டக்களப்பு நுழைவாயில், இலங்கையின் மிகப் பெரிய இயற்கை வாவியான மட்டக்களப்பு வாவி, டச்சுக் கோட்டை உட்பட பல இயற்கையான இடங்களை சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டு வருகின்றனர். ■



பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மட்டக்களப்பு மாவட்ட இவ்வருட அபிவிருத்தி திட்டங்களுக்கென முதற் கட்டமாக 513 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதி தேர்தல் தொகுதிவாரியாக

- மட்டக்களப்பு – 208 மில்லியன்
- கல்குடா – 137 மில்லியன்
- பட்டிருப்பு – 168 மில்லியன்

என ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒதுக்கப்படுகின்ற தொகை ஒரு கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டம், திவிநெகும கிராமப்புற பாலங்களும் பிரவேச வழிகளும், கிராமியப் பாடசாலை அபிவிருத்தியும் சுகநல நிகழ்ச்சித் திட்டங்கள், சிறுவர், முதியோர் இல்லங்கள் திருத்தம் செய்தல் உள்ளிட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு என பயன்படுத்தப்படவுள்ளது.

அபிவிருத்தி திட்டங்களின் அடிப்படையில் பிரதேச செயலகங்களுக்கென நியமிக்கப்பட்டுள்ள பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் ஊடாக வேலைத்திட்டங்கள் மேற் கொள்ளப்படும்.

கடந்த வருடம் மட்டக்களப்பு மாவட்டத் திற்கென பொருளாதார அபிவிருத்தி அமைச்சு உட்பட அனைத்து அமைச்சுக்களினாலும் அபிவிருத்தித் திட்டங்களுக்கென 6,028 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதில் சுமார் 2,000 மில்லியன் ரூபா பொருளாதார அபிவிருத்தி அமைச்சினதாகும்.

இந்த நிதிகளில் 5,130 அபிவிருத்தி வேலைகள் மேற் கொள்ளப்பட்டன. இவற்றில் 75 வீதமான வேலைகள் அனைத்தும் பூரணப் படுத்தப்பட்டு, மிகுதியாக உள்ள வேலைகள் தற்போது தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறிவரும் மீன்பாடும் தேன் நாடு




**மி**ளகு, இஞ்சு, மஞ்சள் போன்ற பயிர்களை உற்பத்தி செய்யும் வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இச் செயற்திட்டம் 03 கட்டங்களாக பிரிக்கப் பட்டு முதலாம் கட்டத்தில் கமுகு 1200 கன்றுகளும், கறுவா 5000 கன்றுகளும் நடப்பட்டன. இரண்டாம் கட்டத்தில் கமுகு 3000 கன்றுகளும், கறுவா 2000 கன்றுகளும் வழங்கப்பட்டு வருவதுடன், மூன்றாம் கட்டத்தில் இஞ்சியும், மஞ்சளும் நடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளை, ஏறாவூர் பற்று, ஆரையம்பதி, வாகரை, ஓட்டமாவடி பிரதேச செயலகங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கன்றுகள் வழங்கப்படுவதுடன் அதற்கான ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஒரு கட்டமாக ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளி களுக்கு சிறு ஏற்றுமதி பயிர்களான கறுவா, கமுகு என்பன வழங்கும் நிகழ்வு மாஞ்சோலை கிராமத்தில் இடம்பெற்றது. ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழக்கின் உதயத்தின் கீழ் மட்டு. நகரில் நவீன சந்தைத் தொகுதி**

கிழக்கின் உதயம் வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 04 கோடி ரூபாய் செலவில் மட்டக்களப்பு பொதுச் சந்தையில் நவீன வசதிகளுடன் கூடிய சந்தைக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட உள்ளது.

இதற்கான அடிக்கல் அண்மையில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திர காந்தனினால் நாட்டி வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் கே. சிவநாதன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் மாநகர சபை அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இச்சந்தை அமைப்பதினூடாக மட்டக்களப்பு மாநகர சபை பிரிவில் வசிக்கும் மக்களும், பொதுச் சந்தை வியாபாரிகளும் பெரும் நன்மை அடைய வுள்ளனர்.

நீண்ட காலமாக மட்டக்களப்பு பொதுச் சந்தையில் நிலவி வரும் இட நெருக்கடி இரு மாடிகளைக் கொண்ட இக்கட்டட தொகுதியினூடாக நிவர்த்தி செய்யப்படுமென தெரிவிக்கப்படுகிறது. ■



# திருமலை மாவட்ட அபிவிருத்திக்கு 594 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு



திருமலை மாவட்டத்தின் இவ்வருட அபிவிருத்திக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 594 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

வரவு செலவு திட்டத்தில் கிராமிய பொருளாதார அபிவிருத்திக்காக பெருமளவு நிதி ஜனாதிபதியினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை அமுல்படுத்தும் பொறுப்பு பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி தேர்தல் தொகுதி ரீதியாக பிரித்து ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் படி திருகோணமலை மாவட்டத்தின் மூன்று தேர்தல் தொகுதியினதும் அபிவிருத்திக்கு இவ்வருடம் 594 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் திருகோணமலைத் தொகுதி அபிவிருத்திக்கு 181 மில்லியன் ரூபாவும், சேருவில தொகுதி அபிவிருத்திக்கு 223 மில்லியன் ரூபாவும் மூதூர் தொகுதி அபிவிருத்திக்கு 190 மில்லியன் ரூபாவும் செலவு செய்யப்படும்.

தொகுதி ரீதியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விபரங்கள் வருமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. மாவட்டத்தில் உப உணவுப்பயிர்ச் செய்கையினை அதிகரிக்க நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உப உணவு பயிர்ச்செய்கையினை அதிகரித்து, விவசாயிகள் அதிகளவு வருமானத்தினை ஈட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்ற விசேட உயர் மட்டக் குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசன குளங்களை அபிவிருத்தி செய்து அதன் மூலம் விவசாயிகளின் உற்பத்தியை அதிகரிப்பது- நெற்செய்கை தவிர்ந்த காலப்பகுதியில் உப உணவு பயிர்ச்செய்கையினை அதிகரித்தல்- விவசாயிகள் மத்தியில் இரசாயனப் பாவனையை குறைத்து இயற்கை முறையான பசளைகளை பாவித்தல்- இயற்கை பசளை பாவிப்பது தொடர்பில் விவசாய மத்திய ஆராய்ச்சி நிலையத்தினால் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு விசேட பயிற்சிகளை வழங்குதல் என்பன தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் உப உணவுப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகள் இல்லாத காரணத்தினால் மிகக் குறைவாகவே உற்பத்தி செய்யப்பட்டது. அந்த நிலைமையினை மாற்றி விவசாயிகளின் உற்பத்திகளை விற்பனைசெய்யும் வகையில் விவசாய அமைச்சு விசேட நிலையங்களை அமைக்கவும் நடவடிக்கையெடுப்பதாக அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார்.

குறிப்பாக நிலக்கடலை, சோயா ஆகியவற்றினை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் மேலதிகச் செயலாளர் தெரிவித்தார்.இதன் மூலம் விவசாயிகள் அதிகளவு இலாபம் ஈட்ட முடிவதுடன் மாவட்டத்தின் வறுமை நிலையை நீக்கி விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்தமுடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.■

**திருகோணமலை தொகுதி**

- திவிநெகும அபிவிருத்தித்திட்டம் -20 மில்லியன் ரூபா
- கமநெகும ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவின் ஒரு வேலைக்கு -70 மில்லியன் ரூபா
- கிராமிய பாலம் , கல்வி, படகு நிர்மாணத்திற்கு -30 மில்லியன் ரூபா
- கிராமிய பாடசாலை அபிவிருத்திக்கு -06 மில்லியன் ரூபா
- வன விலங்கு பாதுகாப்பிற்கு - 25 மில்லியன் ரூபா
- பிரதி அமைச்சருக்கான ஒதுக்கீடு 30 மில்லியன் ரூபா

**சேருவிலத் தொகுதி**

- திவிநெகும அபிவிருத்தித்திட்டம் 20 மில்லியன் ரூபா
- கமநெகும ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவின் ஒரு வேலைக்கு 82 மில்லியன் ரூபா
- கிராமிய பாலம் , கல்வி, படகு நிர்மாணத்திற்கு -30 மில்லியன் ரூபா
- கிராமிய பாடசாலை அபிவிருத்திக்கு -06 மில்லியன் ரூபா
- வன விலங்கு பாதுகாப்பிற்கு - 25 மில்லியன் ரூபா
- பிரதி அமைச்சருக்கான ஒதுக்கீடு -60 மில்லியன் ரூபா

**மூதூர் தொகுதி**

- திவிநெகும அபிவிருத்தித்திட்டம் -20 மில்லியன் ரூபா
- கமநெகும ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவின் ஒரு வேலைக்கு -79 மில்லியன் ரூபா
- கிராமிய பாலம் , கல்வி, படகு நிர்மாணத்திற்கு -30 மில்லியன் ரூபா
- கிராமிய பாடசாலை அபிவிருத்திக்கு -06 மில்லியன் ரூபா
- வன விலங்கு பாதுகாப்பிற்கு - 25 மில்லியன் ரூபா
- பிரதி அமைச்சருக்கான ஒதுக்கீடு -60 மில்லியன் ரூபா■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2014 இல் அனைவருக்கும் மின்சாரம்


ஒளிமயமான 2014 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் இந்த வருட இறுதிக்குள் அனைவருக்கும் மின்சார வசதி அளிக்க சகல நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டிருப்பதாக மின் சக்தி, எரி சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

நாடு முழுவதும் இது வரை 55 இலட்சத்து 91,292 வீடுகளுக்கு மின் வசதி வழங்கப் பட்டிருக்கிறது. இம்மின் வசதி மூலம் நாடளாவிய ரீதியில் 94 சதவீதமான மக்கள் நன்மை அடைந்துள்ளனர்.

நாட்டின் நாளாந்த மின் பாவனை 31.87 மெகா வோர்ட்டாக உள்ளது. வருடாந்தம் 300 மெகா வோர்ட் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்க வேண்டியுள்ளது. இதன் படி இந்த மாதத்தில் நுரைச்சோலை 2 ஆம் 3ஆம் கட்டங்களினூடாக 600 மெகா வோர்ட் மின்சாரம் தேசிய கட்டமைப்புடன் இணைக்கப் படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புரோட்லன்ட் மின் திட்டத்தினூடாக 35 மெகா வோர்ட் கிடைக்க உள்ளதோடு சம்பூர் 500 மெகா வோர்ட் திட்டப் பணிகளும் ஆரம்பிக்கப்பட உள்ளது. யாழ். தீபகற்பத்திற்கு 63 மெகா வோர்ட் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதோடு சுண்ணாகத் தில் உப மின் நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்றும் கூறினார்.

எனவே 2014 ஆம் ஆண்டு நாடு முழுவதும் 100 வீதம் மின்சார வசதி செய்து கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. ■



# 460 மில்லியன் ரூபா செலவில் யாழில் 03 நீதிமன்றங்கள்

யாழ் மாவட்டத்தில் 460 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று நீதிமன்றக் கட்டடத்தொகுதிகள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸினால் திறந்து வைக்கப்பட்டது.

158 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப் பட்ட சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தொகுதி , 175 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மல்லாகம் நீதிமன்றக் கட்டடத்தொகுதி, 127 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஊர் காவற்துறை நீதிமன்றக் கட்டடத்தொகுதி என்பவையே இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட நீதிமன்ற கட்டடத்தொகுதிகளாகும்.

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட பல பிரமுகர்கள் இத்திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டனர். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர்களின் தொழில் வாய்ப்பின்மைக்கு விரைவில் முற்றுப்புள்ளி

**- ஜனாதிபதி**

எல்லைக் கிராமம், கஷ்டப்பிரதேசம், கிளைமோர் குண்டுகள், யுத்த நிறுத்தம் போன்ற பதங்களை அகராதி யிலிருந்தே அழித்தது போல் நாட்டு இளைஞர்களின் தொழில் வாய்ப் பின்மைக்கும் முற்றுப் புள்ளி வைக்கப் பட்டுள்ளது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தனியார் துறையை மட்டுமே நம்பி அரசதுறையை பலவீனப்படுத்திய ஐ.தே.க அரசாங்கத்தின் கொள்கையை இல்லாதொழித்து 05 இலட்சமாகவிருந்த அரச ஊழியர் தொகையை 13 இலட்சமாக்கி உறுதியான கொள்கையை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசாங்க இணைந்த முகாமைத்துவ சேவையில் மேலும் 2638 பேருக்கு நியமனம் வழங்கி அவர்கள் மத்தியில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இளைஞர்கள் தொழிலற்றிருந்த கால கட்டத்தில் ஐ.தே.க அரசாங்கம் அரச சேவையை மட்டுப்படுத்தி ஐந்து இலட்சமாகவிருந்த அரச ஊழியர் தொகையை மூன்று இலட்சமாக்க நடவடிக்கை எடுத்தது. நாம் அரச சேவையில் நம்பிக்கை வைத்து 5 இலட்சமாகவிருந்த அரச ஊழியர் தொகையை 13 இலட்சமாக்கி அரச துறையை பாதுகாத்து விரிவுபடுத்தியுள்ளோம்.

71,79 புரட்சி மற்றும் வடக்கு கிழக்கு பயங்கரவாதம் ஆகியவற்றுக்கு அடிப்படைக் காரணமாக இருந்த விடயங்களுக்கு தீர்வு காண சந்தர்ப்பங்கள் இருந்தும் அதற்கு அன்றைய ஐ.தே.க அரசு தீர்வு காணவில்லை. எனினும் நாம் அவற்றுக்கு காத்திரமான தீர்வுகளை மேற்கொண்டோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். ■

---

# களுத்துறையில் புதிதாக 11 பாலங்கள் அமைக்க திட்டம்



களுத்துறை மாவட்டத்தில் 11 பாலங்களை அமைக்க 815 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப் பட்டுள்ளதாக அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்திலுள்ள ஹொரணை தலகல தெஹிகஸ்பிட்டிய புதிய பாலத்தின் நிர்மாணப்பணிகளை தொடக்கி வைத்து உரையாற்றும் போதே அதனை தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்படவுள்ள 11 பாலங்களில் 4 பாலங்கள் ஹொரணைப் பகுதியில் அமைக்கப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தெஹிகஸ்பிட்டிய பாலம் 210 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப் படவுள்ளது.

இவ்வாறு நாடு பூராகவும் அபிவிருத்திப் பணிகளை அரசாங்கம் துரிதமாக முன்னெடுத்து வருகிறது. இதனால் மக்கள் பெரும் நன்மையடைந்து வருகின்றனர். களுத்துறை மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்படும் 11 பாலங்களில் தெஹிகஸ்பிட்டிய பாலம் 210 இலட்சம் ரூபா செலவிலும், கந்தன பிட்டிய பாலம் 160 இலட்சம் ரூபா செலவிலும், கிரனேசிகந்த பாலம் 250 இலட்சம் ரூபா செலவிலும், மெரேகந்த பாலம் 200 இலட்சம் ரூபா செலவிலும் நிர்மாணிக்கப் படவுள்ளன. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் அரச சேவைக்கு சாரதிகள் இணைப்பு

வட மாகாணத்தை சேர்ந்த 97 சாரதிகள் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளனர். வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறியினால் இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணத்திலுள்ள வட மாகாண ஆளுநரின் பணிமனையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், ஆளுநரின் செயலாளர் எல். இலங்ககோன் உட்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்

வட மாகாணத்தின் 05 மாவட்டங்களைச் சேர்ந்த 97 சாரதிகளுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இது இந்த புதுவருடத்தில் அவர்களுக்கு கிடைத்த பெரு வெற்றியாகும்.

இவர்களில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 59 பேரும், கிளிநொச்சியைச் சேர்ந்த 13 பேரும், முல்லைத்தீவைச் சேர்ந்த 08 பேரும், வவுனியாவைச் சேர்ந்த 06 பேரும், மன்னாரை சேர்ந்த 11 பேரும் உள்ளடங்குவர்.

வட மாகாணத்தில் காணப்பட்ட சாரதி மற்றும் அலுவலக பணியாளர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்பும் வகையில் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.

பரீட்சையில் தோற்றியவர்களில் 104 பேர் நேர்முகப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இவர்களின் வெட்டுப்புள்ளியின் பிரகாரம் 97 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டே நியமனம் வழங்கப் பட்டுள்ளதாக வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் தெரிவித்தார். ■

### வடக்கின் தாதியர் பற்றாக்குறைக்கு முற்றுப்புள்ளி

வட மாகாண சபைக்குட்பட்ட வைத்திய சாலைகளில் நிலவுகின்ற தாதியர் பற்றாக்குறையை நிறைவு செய்யும் நோக்குடன் கடந்த ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 112 தாதியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு தாதி பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியவர்களையே இவ்வாறு வட மாகாண வைத்தியசாலைகளுக்கு நியமித்துள்ளனர். இதற்கமைய,

| | |
|---|---|
| யாழ். போதனா வைத்தியசாலை | 67 தாதியர் |
| வவுனியா மாவட்ட வைத்தியசாலை | 15 தாதியர் |
| முல்லைத்தீவு வைத்தியசாலை | 12தாதியர் |
| தெல்லிப்பழை வைத்தியசாலை | 10 தாதியர் |
| பருத்தித்துறை வைத்தியசாலை | 05 தாதியர் |
| கிளிநொச்சி வைத்தியசாலை | 05 தாதியர் |

வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் வடக்கில் நீண்ட காலமாக நிலவி வந்த தாதியர் பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தொடர்புடைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ■

# 2013 இல் 10,250 வீடுகள் புதிதாக நிர்மாணம்

இந்திய வீட்டுத் திட்டத்தின் 2ம் கட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு பகுதிகளில் 2013 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் 10,250 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித் துள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட 43,000 இந்திய வீட்டுத் திட்டத்தில் 10,184 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவிக்கிறது.

அதன் படி

| | | | |
|---|---|---|---|
| 1. | யாழ் மாவட்டம் | - | 1,832 |
| 2. | கிளிநொச்சி மாவட்டம் | - | 3,090 |
| 3. | முல்லைத்தீவு மாவட்டம் | - | 3,540 |
| 4. | மன்னார் மாவட்டம் | - | 1,074 |
| 5. | வவுனியா மாவட்டம் | - | 648 |
| 6. | மட்டக்களப்பு மாவட்டம் | - | 66 |

வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- 100வீடுகள் நவீன மயப் படுத்தப்பட்டுள்ளது.

இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ்,

- ஒவ்வொரு வீட்டிற்கும் 2,50,000 ரூபா வீதம் வழங்கப்பட்டது.
- 7.8 மில்லியன் ரூபா, பயனாளிகள் வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்பிலிடப்பட்டுள்ளது.
- இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டப்பணிகள் 2012 ஒக்டோபர் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.
- 2014 ஆம் ஆண்டு 16,000 வீடுகள் அமைக்க திட்டம்
- 2015 ஆம் ஆண்டு 17,000 வீடுகள் அமைக்க திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரணைமடு குளம்

வன்னி மாவட்டத்தில் உள்ள மிகப் பெரிய விவசாய நீர்ப்பாசனத் திட்டமே யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் விநியோக திட்டமாகும். இது இரணைமடு குளத்தை அடிப்படையாகக் கொண்டது. யாழ். தீபகற்பம் உட்பட அதனைச் சார்ந்த ஆழ் கடலில் உள்ள தீவுகளுக்கும், கிளிநொச்சி மாவட்டத் திற்கும் சுத்தமான குடி நீரை மட்டுமன்றி விவசாயத் துக்கு தேவையான நீர்ப்பாசன வசதியையும் செய்து கொடுக்கும் ஓர் உயிரூட்டும் நீர்த்தேக்கமாக இரணைமடுக் குளம் அமைந்துள்ளது.

2012ம் ஆண்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த போது அவர் அங்குள்ள மக்களின் ஏகோபித்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு இரணைமடு யாழ். குடிநீர்த் திட்டம் எவ்வித இடையூறும் இன்றி நிறைவேற்றி முடிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

பல கோணங்களிலும் பல்வேறு விதமாக தடைகள் வந்த போதும் அவற்றை வெற்றிகரமாக எதிர் கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 164 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. இது இலங்கைப் பணத்தில் 2,100 கோடி ரூபாவாகும்.

தற்போது இரணைமடு குளத்தின் புனரமைப்புப் பணிகள் முடக்கி விடப்பட்டுள்ளன. இரணைமடு குளத்தின் அணை 34 அடியில் நீர் மட்டம் உயர்ந்திருந்தால் அவ்வணையில் ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 500 ஏக்கர் அடி நீர் நிறைந்திருக்கும். இரணைமடு குளத்தின் அணைக்கட்டு பல வீனம் அடைந்திருப்பதனால் அதன் நீர் மட்டத்தை 30 அடியாக பொறியியலாளர்கள் குறைத்து இருக்கிறார்கள். இதனால் இப்போது அக்குளத்தில் 82 ஆயிரம் ஏக்கர் அடி நீர் குறைந்திருக்கிறது.

இரணைமடு குளத்தில் இருந்து யாழ். குடா நாட்டுக்கும், அதற்கு அப்பால் உள்ள ஆழ்கடலில் உள்ள தீவுகளுக்கும் குடிநீரை அனுப்ப வேண்டு மாயின் குள அணைக்கட்டின் உயரத்தை 36 அடியாக உயர்த்த வேண்டும்.

இவ்வாறு முன்னெடுக்கப்படும் பட்சத்தில் குளத்தில் மொத்தம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் அடி நீர் நிறைந்திருக்கும். இதன் மூலம் கிளிநொச்சி நகரத்துக்கும், பளையில் இருந்து யாழ். குடாநாட்டுக்கும் அதற்கு அப்பாலும் 13 ஆயிரத்து 500 ஏக்கர் அடி குடிநீரை விநியோகிக்க முடியும் என நீர்ப்பாசன நிபுணர்கள் மதிப்பீடு செய்துள்ளார்கள். அத்துடன் இரணைமடு குளத்து நீரை மேட்டு நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சுவதற்கு ஏற்ற நீர்ப்பாசன முறையையும் பயன்படுத்த முடியும் என்று கூறப்படுகிறது.

மறுபுறம் யாழ்ப்பாண பிரதேசத்தின் அடித்தளத்தில் சுண்ணாம்புக் கற்கள் இருப்பதனால் விவசாயிகள் பயிர் செய்கைக்கு பயன்படுத்தும் உரம் கலந்த நீர் சுண்ணாம்புக் கற்களில் படிவதனால் அங்கு நிலத்துக்கடியில் இருக்கும் நீர் பாவனைக்கு உதவாத நச்சுத் தன்மைமிக்க நீராக காலப் போக்கில் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் யாழ். குடா மக்கள் இரணைமடு நீர் விநியோக திட்டத்தை பெரிதும் வரவேற்று காத்திருப்பது தெளிவு.

வட பகுதிக்கான இரணைமடு நீர் பளையில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்தம் செய்யப்பட்ட பின்னர் பொதுமக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மக்களின் அத்தியாவசியத் தேவையான நீரை பெற்றுக் கொடுக்கும் அரசாங்கத்தின் நற்பணியை எவரும் அரசியல் மயப்படுத்தி இலாபமீட்டுவது தவறு. இது வடபகுதி அப்பாவித் தமிழ் மக்களுக்கு இழைக்கும் பெரும் பாதகமான செயலாகும். இந்த உண்மையை உணர்ந்து அனைவரும் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மையைப் பெற்றுத் தரக்கூடிய வகையில் அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் குடிநீர் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களை அணுகுவது அவசியமாகும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ரண் அருண' திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகத் திட்டம்

'ரண் அருண' திட்டத்தின் கீழ் 65,000 பயனாளிகளுக்கு நன்மையளிக்கும் குடிநீர் விநியோகத் திட்டத்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும், நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்தனவும் மக்கள் பாவனைக்காக ஒப்படைத்தனர்.

கம்பஹா மாவட்டத்தில், கட்டான பிரதேச செயலாளர் பிரிவில் பிரஸ்தாப கட்டுநாயக்கா சீதுவ நீர் விநியோகத்திட்டம் மேற் கொள்ளப்பட்டது. 470 மில்லியன் ரூபா செலவில் இது நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

இந்த நீர்த்திட்டம் 27 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியதாகும். ரத்தொழுவ, கல்லவத்தை நீர்த்தாங்கிகளால் கட்டான பகுதிக்கு 3,540 நீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது ராஜபக்ஷவுக்கும் அதனைச் சூழவுள்ள பகுதிகளுக்கும் கட்டுநாயக்க சீதுவ நகர சபை மூலம் 2,000 நீர் இணைப்புக்கள் வழங்கப் பட்டுள்ளன. ■



## இலங்கையில் கிராமப்புற பாலங்களை நிறுவுதல்

கிராமப்புற பாலங்களை அமைக்கும் திட்டம் 2011 ல் உத்தேசிக்கப்பட்டதுடன் 210 கிராமப்புற பாலங்கள் நிர்மாணிக்கும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களிலுள்ள நடைபாலங்கள் மற்றும் பெரிகள் (Ferries) மூலம் கடக்கும் யாவற்றுக்கும் பாலங்கள் அமைக்கப்படும். இதன் மூலம் ஏறக்குறைய 120,000 குடும்பங்கள் நன்மையடையும். 537 கிராமப்புற பாலங்கள் இரண்டாம் கட்டப்பணி மூலம் நிறுவப்படும். இந்த திட்டத்திற்கான நிதியை 100 வீதம் ஐக்கிய இராச்சியம் டச்சு வங்கியின் உதவியுடன் வழங்கவுள்ளது. இது சம்பந்தமான நடவடிக்கைகளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேற் கொண்டு வருகின்றார். ■




நாட்டின் சகல பிரதேச விவசாயிகளின் நலன் கருதி எமது நாட்டுக்கே உரித்தான விவசாயப் பயிர் விதைகளை விவசாயிகளுக்கு வழங்க விவசாயத் திணைக்கள அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். தற்போது வட கிழக்கு விவசாயிகள் தங்களது நடவடிக்கைகளை தீவிரமாக மேற் கொண்டு வருவதால் விவசாயத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நாட்டுக்கே உரித்தான விவசாயப் பயிர்விதைகளை வட கிழக்கு விவசாயிகளுக்கு நடமாடும் வாகனத்தின் மூலம் வழங்கவும், இத்திட்டத்தினை நாட்டின் சகல பிரதேசங்களுக்கு வியாபிக்கவும் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

மேற்படி பாரம்பரிய மரக்கறி வகைகளின் விதைகளைக் குறைவின்றி வழங்கும் திட்டத்தினை தெளிவூட்டும் பல நிகழ்ச்சிகளும் இன்னும் விவசாயத் திணைக்களத்தின் செய்கை மற்றும் பயிற்சிப் பிரிவு மரக்கன்றுகளை நடும் பிரிவு, விநியோகிக்கும் பிரிவு, ஆய்வுப் பிரிவு ஆகியன ஒன்றிணைந்து இது வரையிலும் பாரியளவிலான விதை உற்பத்தியினை மேற்கொண்டு வருகின்றன.


அத்துடன் நடமாடும் சேவைக்குப் புறம்பாக திணைக்களத்தின் பயிர்கள் மற்றும் விதைகள் விற்பனை நிலையங்கள் ஊடாகவும் விதைகளை விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் விவசாயத்திணைக்கள அதிகாரிகள் தெரிவிக் கின்றனர். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதி கலந்து சிறப்பித்த தைப்பொங்கல் நிகழ்வு

## நுவரெலியா









இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org